www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் : 104 ஆடி – ஆவணி, 2002 அன்பளிப்பு : 10/=


தமது சொந்த நிலத்தில், தம்மை தாமே ஆளும் ஆட்சி உரிமையோடு வாழ வழி வகுக்கும் ஓர் அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு.வே.பிரபாகரன்




**நம்பிக்கையுடன் நடைபோடும் சமாதானப் பயணம்**
பக்கம் – 07



**சமாதான இலக்குப் பற்றி தெற்கு என்ன நினைக்கிறது?**
பக்கம் – 05



**போரில்லாத போர்க்களம்**
பக்கம் – 04



**கடலை வெற்றிகொள்ளும் உலகின் முதல் கடற்போர்ச்சேனை**
பக்கம் – 08



**(நிலத்தில்) புரிந்துணர்வும் (நீரில்) புரியாதுணர்வும்**
பக்கம் – 03



# விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம்; தீர்வு முயற்சியில் நம்பிக்கைகள் தோன்ற வாய்ப்பு!

**சிங்கள அரசினதும் - அதன் ஆயுதப் படைகளினதும் அடக்குமுறைக்கு எதிரான தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை புலிகள் இயக்கம் கடந்த 30 வருடகாலமாக தலைமையேற்று - வழிநடாத்தி வருகின்றது.**

**சிங்கள அரசினது அடக்குமுறை அதிகரிப்பும் - அதை எதிர்கொண்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தினது இராணுவப் பலவளர்ச்சியும் - தமிழ்மக்கள் புலிகளின் பின்னால் அணிதிரண்டு அதற்குப் பேராதரவு கொடுத்ததும் ஒன்றிணைந்து போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்தியது.**

**போராட்டம் சர்வதேசமயப்பட்டு வந்த சூழலில், உலகளாவிய ரீதியில் போராட்டத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தி உலக ஆதரவுடன் தமிழரின் போராட்டத்தை இராணுவ வழியில் ஒடுக்க சிங்கள அரசு முயன்றது.**

போராட்டத்தை தலைமையேற்று நடாத்தும் புலிகள் இயக்கத்திற்கு பயங்கரவாத முத்திரைகுத்தி - சட்டரீதியாக தடைசெய்வதன் மூலம் போராட்டத்தை ஒடுக்க முயலும் சதி அரசியலில் முன்னைய சிங்கள அரசு தீவிரமாக ஈடுபட்டது.

புலிகள் இயக்கத்தை தடை செய்ததுடன் தனது சதி அரசியலுக்கு உதவும் வகையில் உலகநாடுகள் சிலவற்றை வென்றெடுப்பதிலும் சிங்கள அரசு வெற்றி பெற்றிருந்தது.

இதன்மூலம், தமிழருக்கு எதிரான இனப்போரை நியாயப்படுத்தவும் அந்தப் போருக்குத் தேவையான உதவிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதிலும் சிங்கள அரசு முயன்றது.

எனினும், சிங்கள அரசின் பெருமெடுப்பிலான போரையும் - அது விதித்த கடுமையான பொருண்மிய - மருத்துவ தடைகளையும் எதிர்கொண்ட புலிகள் இயக்கம் அவற்றை வெற்றிகரமாக சமாளித்ததுடன் போரையும் திறம்பட நடாத்தி உலகின் கவனத்தை ஈர்த்தனர்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமேயில்லை என்ற பேருண்மை சிங்கள மக்களாலும் - உலக சமூகத்தாலும் நன்கு உணரப்படும் அளவுக்கு சிங்களப்படைகள் பாரிய படுதோல்விகள் பலவற்றை சந்தித்து வந்தனர்.

இந்தக் கள யதார்த்தத்தை நன்குணர்ந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம், தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வல்ல அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று பிரகடனம் செய்து சமாதான அரசியலை நடாத்த சிங்கள மக்களிடம் ஆணைகேட்டது.

சமாதான அரசியலுக்கு தடையாகவுள்ள புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்பது புலிகளின் உறுதியான அரசியல் நிலைப்பாடாக இருந்தது.

தாய்லாந்துப் பேச்சுக்கு முன்னதாக புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்று சிங்கள அரசாங்கம் கூறிவந்தது. இப்போது அதைச் செயலிலும் காட்டத் தீர்மானித்துள்ளது.

புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு விதித்திருந்த தடையை நீக்க - அது முடிவெடுத்திருப்பது வரவேற்கத்தக்கவொரு விடயமாகும்.

இதன்மூலம், தமிழரின் சட்டபூர்வமான அரசியல் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை சிங்கள அரசாங்கமும் ஏற்றுள்ளது.

இதன் வாயிலாக, சமத்துவமான அரசியல் பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்திருந்து தமிழரின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுபற்றி பேசும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனினும்,புலிகள் இயக்கம் மீதான தடைநீக்கம் என்பது நிரந்தரமான விடயமாக அல்லாது, தற்காலிகத் தடைநீக்கமாவே

(2ம் பக்கம் பார்க்க)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

www.eelamview.com

www.eelamview.com



# நம்பிக்கை இலக்கை நோக்கி சமாதான முயற்சிகள்

தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அமைதிவழியில், அரசியல் தீர்வுகாண நோர்வேயின் முன்முயற்சியுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதானமுயற்சிகள் நம்பிக்கை தரும் வகையில் நடைபெறுகின்றன.

தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கத்திற்கும் – பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையே அர்த்தமுள்ள போர்நிறுத்த உடன்பாடொன்று இவ்வருட முற்பகுதியில், காணப்பட்டமையானது சமாதான முயற்சிக்குக் கிடைத்த முதலாவது உறுதியான வெற்றியாகும்.

இரு பகுதியினரும் உடன்பட்டு – கைச்சாத்திட்ட போர்நிறுத்த உடன்படிக்கை விதிகளில் முக்கிய அம்சமாகவிருந்த 'பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு நெருக்கடிகளையும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தி நிற்கும், பொது மக்களின் வாழ்விடங்களில், பொது இடங்களில் உள்ள படைமுகாம்களை விலக்கிக் கொள்ளல்,' என்ற விடயத்தில் சிங்கள அரசு முழுமுயற்சியையும் காட்டவில்லை. ஆயினும், அவற்றிற்கு ஒரு கால அவகாசம் அளித்து – சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த, புலிகள் இயக்கம், உதவியுள்ளது.

இப்போது, தாய்லாந்துப் பேச்சுகளுக்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டு – பேச்சுவார்த்தையில் பங்கெடுக்கப்போகும் இருபகுதிப் பிரதிநிதிகளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாதம் (செப்டெம்பர்) 16 இலிருந்து 18ம் திகதி வரையான மூன்று நாட்கள் தாய்லாந்தில் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

வட – கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை புலிகள் இயக்கத்திற்கு வழங்கி – சமாதானப்பேச்சிற்கு ஒரு உறுதியான அத்திவாரமிடுவது என்பது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் நீண்டநாள் நிலைப்பாடாகும். பிரதமரின் முயற்சியை புலிகள் இயக்கமும் ஆதரித்து – ஏற்றுக்கொண்டுள்ளது.

உத்தேச இடைக்கால நிர்வாகத்திற்கு இருக்க வேண்டிய அதிகாரங்கள் மற்றும் அது தொடர்பான நடைமுறைகள் பற்றி முடிவெடுக்க வேண்டிய முக்கிய பேச்சுவார்த்தையாக தாய்லாந்துப் பேச்சுக்கள் அமையவிருக்கின்றன.

சிங்கள அரசிற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையேயான இந்தச் சமாதானப்பேச்சை உலகநாடுகள் அனைத்தும் வரவேற்றுப் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

இலங்கைத்தீவில் போர் ஓய்ந்து – அமைதி நிலவ வேண்டும் என்பது உலகநாடுகளின் விருப்பமாகவுள்ளது. முன்னரைப் போலல்லாது இம்முறை, சமாதானத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதில் உலகசமூகம் அக்கறையாகவுள்ளது. இதன்பொருட்டு சிங்கள அரசிற்கு பொருண்மிய – இராஜதந்திரரீதியில் ஆக்கபூர்வமான வகையில் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. இலங்கைக்கான பொருண்மிய உதவிகளையும் – சமாதானச் செயற்பாடுகளையும் ஒன்றிணைத்த உலகநாடுகள் சமாதானத்தைச் சாத்தியமாக்க உறுதிபூண்டுள்ளன.

ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, ஜப்பான் போன்ற சக்திமிக்க அரசுகளும் – அவற்றின் கூட்டணிகளும், மற்றும், உலக நிதிநிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உலகளாவிய நிறுவனங்களும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றன.

இவை காரணமாக, தமிழ் – சிங்கள இனச்சிக்கல் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் இன்று சமாதானம் பற்றிய நம்பிக்கை தமிழ் – சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

அமைதிவழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியான வகையில் – நிரந்தரத் தீர்வொன்றைக்காணும் உறுதிப்பாட்டுடன் புலிகள் இயக்கமும் உள்ளது. சிங்கள அரசாங்கமும் – உலக சமூகமும் ; தமிழரின் அரசியல் ஏகபிரதிநிதிகள் புலிகள் இயக்கம்தான் என்று ஏற்றுக்கொண்டு சமாதான முயற்சிகளில் புலிகள் இயக்கத்திற்கு அங்கீகாரமும் – ஆதரவும் கொடுத்து, சமாதான முயற்சிகளை வலுப்படுத்தி வருகின்றன.

சிங்கள அரசாங்கமும், அமைதி முயற்சியை நேர்மையுடனும், அரசியல் உறுதியுடனும் தொடர்கின்றது என்றே புலிகள் இயக்கமும் நம்புகின்றது.

போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு கடந்த 7மாத காலமாக இரு பகுதியினர்க்கும் இடையே இழுபறி நிலையில் இருந்துவந்த புலிகளின் கிழக்கு மாகாணத்திற்கான கடற்போக்குவரத்தை சிங்கள அரசு சுமூகமாகத் தீர்க்க உதவியுள்ளது.

இதுபோன்றே, புலிகள் இயக்கம் ஆரம்பத்திலிருந்து கூறிவந்ததுபோல, புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கி, தமிழரின் சட்டபூர்வமான அரசியல் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை சிங்கள அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இது நம்பிக்கைதரும் அரசியல் விடயமாகும். ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் இதற்காகப் பாராட்டப்பட வேண்டியதே.

நீதிமன்றுகள் வாயிலாக, பேரினவாதிகள், சட்டச்சிக்கல்களை எழுப்பி சமாதான விரோதச் செயற்பாடுகளில் இறங்கமுயலும் சதி அரசியலை இந்தத் தடைநீக்கச் செயற்பாடு இல்லாதொழிக்கின்றது. இதனால், சமாதான முயற்சியின் எதிர்காலம் மிகவும் பிரகாசமடைந்துள்ளது.

இணக்கப்பாடேற்படுவதும், ஒப்பந்தங்கள் கைச்சாத்தாவதும் சமாதான முயற்சிகளை உறுதியானதாகவோ! நிரந்தர அரசியல்தீர்வைக் கொண்டு வந்துவிடவோ! உதவிவிடாது. மாறாக, அவற்றை, சிங்கள அரசு சரியாக நடைமுறைப்படுத்துவதிலும், அதற்கான வழிவகைகளைத் திறந்துவிடும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றங்களையும் – திருத்தங்களையும் செய்வதிலும்தான் சமாதானத்தின் வெற்றி தங்கியுள்ளது.

போர்நிறுத்த உடன்பாட்டைப் போலல்லாது தாய்லாந்துப் பேச்சில் எட்டப்படும் விடயங்களை சிங்கள அரசு நேர்மையுடனும் – முழுமையாகவும் அமுல்படுத்த முயலவேண்டும். அப்போதுதான் நிரந்தர அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகள் நிகழ வழியேற்படும், இந்த அழகிய தீவில் அமைதி நிலவச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

*முதலாம் பக்கத் தொடர்ச்சி...*

அமையுமென்று கூறப்பட்டுள்ளது. மாதாமாதம் சிங்கள நாடாளுமன்றில் நடைபெறும் வாக்கெடுப்பில், சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் இத்தற்காலிக தடைநீக்கம் நீடிக்கப்பட்டுவரும் **என்று விளக்கம்** கூறப்பட்டுள்ளது.

சமாதானத்தின் எதிர்காலம் பற்றிய தமிழ்மக்களின் நம்பிக்கையில் விழுந்துள்ள ஒரு கரும்புள்ளியாகவே தமிழர் தரப்பால் பார்க்கப்படும் நிலையையும் இது தோற்றுவித்துள்ளது.

எப்படியாவது சமாதானப் பேச்சுக்களைக் குழப்பியே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் சிங்களப்பேரினவாத சக்திகளுக்கு இந்த "தற்காலிக தடைநீக்க" உத்தரவு நம்பிக்கையைக் கொடுப்பதாகவே அமைந்துள்ளது.

சிங்கள நாடாளுமன்றமானது பேரினவாதிகளின் செல்வாக்கிற்குள்ளேயே இன்றுவரை காணப்படுகின்றது. சிங்களத்து அரசியலில் நெருக்கடிகள் அல்லது திடீர் திருப்பங்கள் தோன்றும்போது பேரினவாத சக்திகளின் கை மேலோங்கி வந்துவிட வாய்ப்புக்கள் உண்டு.

இத்தகையதொரு அவலநிலை தோன்றினால் இது வரை காலமும் சமாதானத்திற்காகச் செய்யப்பட்ட அனைத்து முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராகி வீணாகிவிடும் அபாயத்தை எவரும் மறுக்கமுடியாது.

சமாதானத்தை உருவாக்கி - இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண சிங்கள - தமிழ்மக்கள் அளித்த மக்களாணையை வைத்துக்கொண்டு புலிகள் இயக்கம் மீதான தடையை நிரந்தரமாக நீக்கி - சமாதானத்தின் எதிர்காலத்தை நிச்சயமானதொரு அடித்தளத்தில் நிலைநிறுத்திவிட வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தவறவிட முனைகின்றது என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

எனவே, தற்காலிகத் தடைநீக்கம் என்ற முடிவை மாற்றி புலிகள் இயக்கம் மீதான தடையை நிரந்தரமாக நீக்கி - சமாதானத்தின் எதிர்காலத்தை பிரகாசமானதாக மாற்றியமைக்க ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சிங்கள அரசாங்கம் முன்வரவேண்டும் என்று புலிகள் இயக்கமும் - தமிழ்மக்களும் விரும்புகின்றனர்.



www.eelamview.com

www.eelamview.com





# (நிலத்தில்) புரிந்துணர்வும் (நீரில்) புரியாதுணர்வும்

-க.வே.பாலகுமாரன்-

தமிழக திரைப்பட மொழியில் கூறினால் வெற்றிகரமாக 175 ஆவது நாளையும் தாண்டி நடைபோடுகின்றது போர்நிறுத்த உடன்பாடு. இரு தரப்பிற்குமான உடன்பாடுகள் அவை எவையாக இருந்தாலும் இவ்வுடன்பாடுபோல நீடிக்கவுமில்லை, மேலும் நீடிக்கும் என்கிற நம்பிக்கையை தரவுமில்லை. இதற்குப் பிரதான காரணம் தமிழ்மக்களின் தாயகப்பகுதியில் இன்று நிலவும் அரசியல், இராணுவ,சமூக கள நிலைகளின் யதார்த்தத்தினை பெருமளவு பிரதிபலிப்பதாக இவ்வுடன்பாடு அமைந்திருப்பதே யாகும். இதுவொரு புதிய பரிமாணம். இக்காரணம் பற்றியே சிங்களப் பேரினவாதிகள் அதிர்ச்சியடைந்து ரணில் அரசை குலையச் செய்ய முயலவும் எம்மக்கள் ஏதோ ஒரு வகையில் ஆறுதல் அடையவும் நேர்ந்துள்ளது. இவ்வுடன்பாட்டினை அதற்குரிய பெயரான போர்நிறுத்த உடன்பாடு என அழைக்க இன்று யாரும் விரும்புகிறார்களில்லை. M.O.U என்றோ புரிந்துணர்வு உடன்பாடு என்றோ அழைக்கவே பலரும் விரும்புகின்றனர். இது அவர்கள் ஆழ்மன விருப்பின் வெளிப்பாடு இருதரப்பும் போர் நிறுத்தத்திற்கப்பாலும் சென்று முழுமையான புரிந்துணர்வு நிலையை அடைய வேண்டுமென்பதே இதன் நோக்கம்.

ஆனால்....? என்கிற இக்கேள்வியை இங்கே நாம் எழுப்பவேண்டியவர்களாகின்றோம். இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என்கிற மாயச்சொற்கள் எப்போதுமே தமக்கே உரித்தானதுபோல செயற்படும் சிந்தனை 1948 இல் இலங்கை சிங்களவரிடம் கைமாறிய போது தமிழ்மக்களின் இறைமையையும் கையகப்படுத்தியது. அதே இறைமையைக் காரணம்காட்டி தமிழ்மக்கள்மேல் அடக்கு முறையைக் கட்டவிழ்த்த வரலாறை சிங்களம் முதலில் புரியவேண்டும். தமிழ் மக்களின் இறைமையை மீட்கவே புலிகள் நடத்திய கால் நூற்றாண்டையும் தாண்டிவிட்ட விடுதலைப்போர் சிங்களத்தின் இறைமையை, பிரதேச ஒருமைப் பாட்டினை கேள்விக்குறியாக்கியது. அப்போதுதான் உலக அம்பலமேறி அபயக்குரலெழுப்பியது சிங்களம். வழியின்றி புலிகளின் நியாயாதிக்க நிலைப்பாட்டை ஏற்றே போர்நிறுத்த உடன்பாட்டினை செய்ய முன் வந்தது. நிலத்தில் இந்நிலைப்பாட்டினை ஏற்ற சிங்களம் இப்போது நீரில் அதனை ஏற்க மறுக்கின்றது. நிலமும், நீரும் இணைந்ததே எம் தாயகமல்லவா? பொதுவில் பலரும் கருதுவதுபோல் நிலம் மட்டும் எம் வாழிடமல்ல. தமிழீழ தாயகத்தின் பாதுகாப்பென்பது கடலோடு ஒன்றிப் போயுள்ளது என்பது புலித்தலைவனின் புதிய வேதம். நிலத்தில் எம்மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாயின் நீரும் எமக்கு காப்பாக வேண்டும்.

ஆனால், சிங்களம் இதனை புரிந்த உணர்வுடன் ஏற்க மறுக்கின்றது. கடலில் மேலாதிக்கம் பெற்ற சக்தியாக தன்னைக்காட்ட முயல்கின்றது. உடன்பாட்டினைப்பயன்படுத்தி நிலத்தில்பெற முடியாததை நீரில் பெறமுனை கிறது. தமது கடற்படை எங்கும் செல்லும் என்கிறார் தயாசந்தகிரி. புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தா விட்டால் எதற்கு வீணே கடற்படை கடலில் நடமாட வேண்டும் என சிங்கள இனவாதிகள் குரலிடுகின்றார்கள். இப்படிப்பட்ட சூழலிலே கடற்புலிகள் பொறுமை காத்து வருவதாலே கடலில் மோதல்கள் தவிர்க்கப்பட்டு வருகின்றன. சுமுகமான சூழல் உருவாக வேண்டும் என்கிற நோக்கிலே பத்து கடல் மைலுக்குள் கடற்புலிகள் நடமாட்டம் இருக்கும் என விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்கமறுக்கும் சிங்களக்கடற்படை கரையிலிருந்து பார்த்தால் தெரியுமளவு தொலைவில் டோறாக்களை நிறுத்தி ஆட்டம் போடுகின்றது. கடற்போர் நடைபெற்ற வேளை இது சாத்தியப்பட்டிருக்குமா? கடற் புலிகளுக்கஞ்சி சர்வதேச கடற்பரப்பினுள் சென்று பயணித்ததை இவர்கள் மறந்துவிட்டார்களா? சிங்களத்தின் இறைமையை கடலில் எம்மக்கள் ஏற்கவேண்டும் என்பதற்கா இப்போர்நிறுத்த உடன்பாடு? இதுவே நாமெழுப்பும் வினா.

கடல் எம்மக்களின் உயிர் நாடியல்லவா? கடலன்னை மடியிலே வாழ்பவரல்லவா நாம். கடல்த்தாய்க்கும் எமக்குமுள்ள உறவினை, பிணைப்பினை இவர்கள் அறிவார்களா? யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருமலை, மட்டக்களப்பு, கல்முனை என சிறிலங்கா அரசாலே வகுக்கப்பட்ட கடற்தொழில் விரிவாக்க வலயங்கள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட மீன்பிடித்தொழில் சார்ந்த துறைகளில் மிகக் கூடுதல் வாய்ப்புக்களைக் கொண்டவை என்கிறார் - யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையைச் சேர்ந்த ஏ.ஆசை ஆனந்தன். அவர் மேலும் எமது கடல்வளம் அதன் மொத்தப் பரப்பளவு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். இலங்கைத்தீவின் மொத்தக் கரையோர நீளம் தீவுகள், குடாக்கள் உட்பட 1920 கிலோமீற்றராகும். இதில் வடகிழக்கு கரையோரம் 1200 கிலோமீற்றர். இத்தோடு ஆழம் குறைந்து அகன்ற கண்டமேடைத்திட்டுக்கள், புகழ் வாய்ந்த மன்னார் முத்து கடலடித்தளமேடை, பேதுரு மேடை போன்ற கண்டமேடைப்பகுதிகள், பரந்த உவர்நீர் பரப்புக்கள், பல நன்னீர் வாவிகள் எல்லாமே கடலன்னை எமக்களித்த வரம். இலங்கையின் மொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியில் 53 விழுக்காடு எம் மக்களின் உழைப்பு. கடலட்டை, இறால், நண்டு, களவாய் போன்ற கடலக ஏற்றுமதி பொருட்கள் எமது கடற்தாயகத்திற்குரியவை. 1989 ஆம் ஆண்டின் கணிப்பொன்றின்படி இலங்கையின் மொத்த மீனவ குடித்தொகையான 412,200 பேரில் 276,329 பேர் எம்மக்கள். அதாவது 66.3 விழுக்காடு.

இத்தகைய வளங்களை எம்மக்களுக்கு எட்டாமல் செய்யவே அன்றிலிருந்து இன்றுவரை சிங்களம் முயல்கின்றது. 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஜே.ஆர் வெளியிட்ட கடல்வலய பாதுகாப்புப் பிரகடனம் தொட்டு இன்றுவரை கரையிலிருந்து 12 மைல் வரையிலான ஆள்புல எல்லையை, கரையிலிருந்து 200 மைல் அல்லது 322 கி.மீற்றர் வரையிலான பொருண்மியத்தனியுரிமை வலயத்தினை எம்மக்களுக்கு எட்டாத பகுதியாக்கவே சிங்கள அரசுகள் முயன்று வந்துள்ளன. எம்மக்களின் வாழ்வுரிமையைப்பறித்து கடலில் 'குமுதினிப்படகு படுகொலை'போல் வெறியாட்டம் போட்டு 1990 இன் பின்னான 2ம் கட்ட ஈழப்போரின்போது பெரும்பாலான மீன்பிடிக்கிராமங்களான தீவுப்பகுதி, வலிகாமம் வடக்கு, வடமேற்கு, கட்டைக்காடுப்பகுதி, முல்லைத்தீவின் தென் கரையோரம், மன்னார்த்தீவு, சிலாபத்துறை, வங்காலை என்பவற்றை ஆக்கிரமித்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்களை வெளியேற்றியது. இம்மேலாதிக்கப் போக்கிற்கு பதிலடியாக அதனை முறியடித்து வெற்றிகாணவே கடற்புலி உருவாக்கம் பெற்றது.

எனவே இத்தனைக்குமெதிராக கடற்புலிகள் நடத்திவரும் உன்னத வீரம், ஈகம் நிரம்பிய விடுதலைப் போராட்டம் பற்றிய புரிந்துணர்வு இவர்களுக்கு இருக்கிறதா? 1984 ஆம் ஆண்டளவில் புலிகளின் கடற்புலிப்பிரிவிற்கு அதன் வரலாற்றுப் பிறப்பை ஏற்படுத்திய தலைவர் கடற்புலிகள் எனப்பெயர் சூட்டிய ஆறு வருடத்தின் பின் தமிழ்மக்களின் கடல் இறைமையை நிலைநாட்ட 1990 ஆம் ஆண்டு ஏழாம் மாதம் பத்தாம் திகதியன்று முதலாவது கடற் கரும்புலித்தாக்குதலை மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் தொடுத்தனர். அன்றிலிருந்து கடற்புலிகளின் பத்தாவது ஆண்டு நிறைவு நாளை அண்மையில் நினைவு கூர்ந்த நாள்வரை கடலில் செந்நீரால் எழுதப்பட்ட விடுதலைக் காவியம் எவராலும் மதிப்பிடக்கூடியதா? ஒரு நாட்டின் கடற்படைகூட இத்தகைய பாரிய பணிகளை செய்திருக்குமா? மீனவ மக்கள்மேலே வெறியாட்டம் போட்ட கயவர்களை அழித்து, குடாநாடு முற்றுகையிடப்பட்ட பொழுது கிளாலி நீரேரியை கட்டுப்பாட்டினுள் தம் ஆன்ம தியாகத்தால் கொண்டுவந்து முற்றுகையை முறியடித்து, புலிச்சேனைக்கு விநியோகத்தினை மேற்கொண்டு, ஆனையிறவின் வெற்றிக்காக குடாரப்பு தரையிறக்கத்தினைச் செய்து, ஓயாத அலை ஒன்றின்போது சிங்களப் படையின் தரையிறக்கத்தினை தடுத்து பாரிய இராணுவ வெற்றிகளுக்கு வழி சமைத்து - இன்று புலிகளை அழிக்க முடியாத நிலைக்கு உயர்த்திய கடற்புலிகளை கடலில் நடமாடத் தடைவிதிக்க அல்லது நிபந்தனைகளிட்டு தமது மேலாதிக்கத்தினை நிலைநாட்ட சிங்கள அரசு முயன்றால் இதற்குப் பெயர் புரிந்துணர்வா?

"தரையுத்தம் போலல்லாது கடற்போர் வித்தியாசமானது. தரையில் புறநிலைகளைக் கண்டறிந்து செயற்படலாம். இயற்கையின் கோடுகளைக் கண்டறிந்துகொள்ளலாம். பாதைகளை வரித்துக்கொள்ளலாம். விழுப்புண் ஏற்பட்டால் நிலம் தாங்கும். கடல் அப்படியல்ல - எல்லையற்று விரிந்து கிடக்கும். குறிப்புக்கள் புலப்படாது. இருள் கவிந்ததும் பாதைகள் தெரியாது. சதா அசையும் அதன் முதுகில் நின்று சண்டை பிடிப்பது சிரமம். கடற்போர்க்களம் மிக நுட்பமானது. நிறைய பயிற்சி அனுபவம் தேவை. கடற்போருக்கு அபார நெஞ்சுரம் வேண்டும். எந்நேரமும் தயார்நிலை வேண்டும்". இது குடாநாட்டு முற்றுகையை கடற்புலிகள் முறியடித்தபோது 1993 ஆம் ஆண்டு யூன் மாதம் பிரம்மஞானி எழுதியவை. "எமது போராளிகள் கடற்போர் கலையில் வல்லவர்கள். அபாரமான துணிச்சல் கொண்டவர்கள். எமது துணிவிற்கு எதிரி பயப்படுகிறான்" என்கிறார் கேணல் சூசை.

எனவே கடலிலே கடற்படையின் மேலாதிக்கம் சிதறடிக்கப்பட்ட உண்மை உலகறிந்தது. இதற்குக் கடற்புலிகளும் எம்மக்களும் கொடுத்த விலை உலகறியாதது. ஆனால் இனிமேல் அறியவேண்டியது. 163 கடற்கரும்புலிகள் உட்பட 1066 கடற்புலி மாவீரரை இம்மண் ஈந்திருக்கின்றது. கடலன்னை மடியிலே இவ் ஆயிரம் மாவீரர் நெஞ்சும் துடிதுடித்தவண்ணமே உள்ளன. கடலலேறி தமது நவீன கடற்கலங்களை காட்டி அச்சுறுத்த முடியாத நிலை கடற்கல அழிப்புக்களால் நேர்ந்தவை. பதினாறு கரையோரக் கலங்கள், 5 கட்டளைக் கலங்கள்,3 விநியோகக் கப்பல்கள், ஒரு தரையிறங்கு கலம், இழுவைப் படகுகள், உட்கரையோரக்கலங்கள் என 35க்கு மேற்பட்ட கலங்கள் அழிக்கப்பட்டன. எத்தனை கோடி இழப்புக்கள், எத்தனை ஆயிரம் உயிர்கள் இவற்றால் அழிக்கப்பட்டன. இப்போது கடற் புலிகளால் கடற்படையின் மேலாதிக்கம் சிதறடிக்கப்பட்டுவிட்டது. அண்மைக் காலம் வரை எந்நேரம் என்றில்லாமல் நெருப்புத்துண்டென சீறிப்பாயும் குண்டுகளால் கடல் சிவந்தவண்ணமேயிருந்தது.

இதுதான் வரலாறு. இப்போது போர்நிறுத்த உடன்பாடு தனது கடல் இறைமைக்கு தடையாக இருக்க முடியாதென சிங்களம் கூறினால் அதுயாருடைய இறைமை என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகி விடும். அப்போது இறைமை என்கிற கேடயம் பேரினவாதம், அடக்குமுறை என்பனவற்றினை மறைக்கும் கவசமல்ல என்பதனையே புலிகள் மீண்டும் நிரூபிக்கப்போகிறார்கள். நாளையும் தமிழ்மக்களுடைய கடல் இறைமையை தாமே பிரயோகிப்பதாக சிங்களம் கருதினால், அவ்வாறாயின் புலிகளோடு எதற்காக போர்நிறுத்த உடன்பாடு? புரிந்துணர்வு? எனவே இவ்வினாக்களுக்கு இணக்கமான பதிலை விரைவில் சிறிலங்கா காணும் அல்லது காண வேண்டும். இதுவே எமது வேணவா. ■

> இப்போது போர்நிறுத்த உடன்பாடு தனது கடல் இறைமைக்கு தடையாக இருக்க முடியாதென சிங்களம் கூறினால் அதுயாருடைய இறைமை என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகி விடும். அப்போது இறைமை என்கிற கேடயம் பேரினவாதம் அடக்குமுறை என்பன வற்றினை மறைக்கும் கவசமல்ல என்பதனையே புலிகள் மீண்டும் நிரூபிக்கப்போகிறார்கள்.

நன்றி : கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன்
புவியியல் துறை யாழ் பல்கலைக்கழகம்



www.eelamview.com

www.eelamview.com





# போரில்லாத போர்க்களம்

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துவது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய இலக்காகும்.

இந்த அரசியல் இலக்கை எட்டுவதற்காக 160 நாட்களை உடன்படிக்கை காலவரையறை செய்திருந்தது.

இக்கால எல்லை முடிவடைந்து மேலதிகமாக இரண்டு வாரங்களும் கடந்துவிட்டன.

ஆயினும், உடன்படிக்கையிலுள்ள விதிகளை, ஒப்புக்கொண்டபடி, சிறிலங்கா அரசாங்கம் சரியாக நிறைவேற்றவில்லை. உடன்படிக்கையை அது அரையும் குறையுமாகவே அமுலாக்கி வருகின்றது.

இது சமாதானம்பற்றி மக்களிடம் இருந்த நம்பிக்கையை சிதைவடையச் செய்விப்பதாகவே காணப்படுகின்றது.

கோவில்கள் - பாடசாலைகள் மற்றும் தனியார் மற்றும் பொதுக் கட்டடங்களில் முகாம் அமைத்துள்ள படையினர் - ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 160 நாட்களுக்குள் - அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்பது ஒப்பந்த விதி.

எனினும் தமிழர் தாயகத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட இந்தவகை இடங்களில் இருந்து படையினர் இதுவரை வெளியேறவில்லை.

"ஓகஸ்ட் 2ம் திகதிக்கு முன்னர் குறித்த இடங்களில் இருந்து படையினர் விலக்கிக் கொள்ளப் படுவார்." என பாதுகாப்பு அமைச்சகம் உறுதிகூறி அறிக்கை வெளியிட்டிருந்தது. வழமை போலவே இந்த வாக்குறுதியையும் அரசாங்கம் உரியகாலத்துள் முற்றாக நடைமுறைப்படுத்தவில்லை.

சில பாடசாலைகள் மற்றும் கோவில்களிலிருந்தும் படையினர் வெளியேறி இருந்தாலும் அந்தப் பாடசாலைகளுக்கு மற்றும் கோவில்களுக்கு அருகில் உள்ள காணிகளில் புதிதாக முகாம்களை அமைத்து படையினர் நிலை கொண்டுள்ளனர்.

படையினரின் இச்செயல்கள் போர்நிறுத்த உடன்படிக்கை விதிகளை எள்ளி நகையாடுவதுபோல அமைந்துள்ளன.

புலிகள் இயக்கத்திற்கும் - சிங்கள அரசாங்கத்திற்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஏற்பட்ட போர் ஓய்வைப் பயன்படுத்தி குடாநாட்டில், பாரிய இராணுவத்தளங்கள் சிலவற்றை படையினர் அமைத்துள்ளனர்.

நுணாவில் - வரணி மற்றும் அரியாலை போன்ற ஊர்களில் மக்களின் வீடுகளை - காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள இந்தப் பெருமுகாம்கள் சமாதானம் பற்றிய அவநம்பிக்கையின் சாட்சியங்களாக நிமிர்ந்து நிற்கின்றன.

தமிழர் நிலத்தில் போர் ஓய்ந்துள்ளது என்பது எவ்வளவிற்கு உண்மையோ! அந்தளவுக்கு அங்கே இராணுவப் பிரசன்னமும் அதிகரித்துள்ளது என்பதும் உண்மையாகும்.

முகமாலைக்கூடாக குடாநாட்டிற்குள் செல்லும் ஒருவர் ஒரு படைமுகாமை ஊடறுத்துப்பயணிக்கும் ஒரு பயங்கர உணர்வையே பெறுவார்.

கொடிகாமம் - நுணாவில் பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் A9 பாதையானது படைத்தளத்தின் மையப்பகுதியூடாகச் செல்லும் ஒரு இராணுவ ஒழுங்கை போன்றே காணப்படுகின்றது.

இதேபோன்று புளியங்குளத்திலிருந்து வவுனியா செல்லும் A9 பாதை நெடுகிலும் அப்பாதையைப் படையினர் ஒரு பயிற்சித்திடலாகவே பயன்படுத்தி வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு தவிர்ந்த ஏனைய போர்ப்பயிற்சிகள் இந்த A9 வீதி மீதே நடைபெறுகின்றது. வீதியின் ஒரு பக்கத்தால் பிரயாணிகள் வாகனங்கள் ஊர்ந்து செல்ல வீதியின் மறு பாதியில் படைச்சிப்பாய்கள் துப்பாக்கிகளை ஏந்தியபடி இராணுவப்பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் பாதைகளில் எந்த நேரத்திலும் - எந்த இடத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பேரச்சத்துடனேயே மக்கள் பயணிக்கின்றனர்.

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள சோதனைச் சாவடிகள் - காவலரண்கள் உடன்பாடு அமுலுக்கு வந்து 30 நாட்களுக்குள் நீக்கப்பட வேண்டுமென்பது ஒப்பந்த விதி.

ஆயினும் பெருமளவு சோதனைச் சாவடிகள் - காவல் அரண்கள் அகற்றப்படாது அப்படியே உள்ளன.

இவற்றில் சோதனைகள் நடைபெறுவதில்லையே தவிர படையினரின் பிரசன்னம் எந்த மாறுதலும் இல்லாமல் தொடர்ந்தபடியே உள்ளது. பல இடங்களில் இந்தப் படை அரண்கள் இராணுவத்தினரால் புதுப்பிக்கப்பட்டு - பலப்படுத்தப்பட்டு வருகின்றன.




மீன்பிடித்தடை நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தல் விடுத்திருந்தாலும் மீன்பிடிமீது பல்வேறு தடை நடவடிக்கைகளை - கெடுபிடிகளை மீனவர்மீது படையினர் சுமத்தியே வருகின்றனர்.

இந்தப் போர்நிறுத்த சூழலிலும் துணை இராணுவப்படைகளை (ஊர்காவற்படை) புனரமைப்பதிலும் - பலப்படுத்துவதிலும் அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது. இது அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் பற்றிய உறுதிப்பாட்டில் சந்தேகத்தை உண்டு பண்ணுவதாகவே அமைந்துள்ளது.

"இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் இலக்குடன் இருதரப்பும் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடவேண்டும்." என்ற ஒப்பந்தவிதியை புலிகள் இயக்கம் முழுமையாகக் கடைப்பிடித்து வருகின்றது.

ஆனால் சிங்கள அரசாங்கத்தின் தரப்பில் இது ஏனோ - தானோ! என்ற குழப்ப நிலையே கடைப்பிடிக்கப் படுகின்றது.

சமாதானம் மலரப்போகின்றது என்ற நம்பிக்கையுடன் எதிர் காலத்தைக் கற்பனை செய்து கொண்டு வாழும் தமிழ்மக்களை நோக்கி படையினர் "எங்களது கைகள்தான் கட்டப்பட்டிருக்கின்றனவே தவிர கண்கள் கட்டப்படவில்லை" என்று மறைபொருளில் வலியுறுத்திவரும் படையினர் தமிழ் மக்களின் மனதில் பய உணர்வை விதைத்து வருகின்றனர்.

தமிழர் தாயகத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அதிகரித்துவரும் இராணுவப்பிரசன்னங்களும் - படையினரின் மிரட்டும் நடவடிக்கைகளும் - அரசாங்கத்தின் அசமந்தப் போக்குகளும் சமாதானத்தின் முன்னாலுள்ள தடைக்கற்களாகவே கருதப்படுகின்றன.

இத்தடைகளை அகற்றி சமாதானப் பாதையை செப்பனிடவேண்டிய முக்கிய கடமை ரணில் விக்கிரமசிங்கவினது அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. ■

# விடுதலை எப்போது ?



'சந்தேக நபர்கள் ஆறுமாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களுக்கு பலவிதமான நோய்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பிள்ளைகள் தந்தையின் அரவணைப்பின்றி ஏங்கி மனதளவில் பாதிப்புற்றவர்களாக உள்ளனர். அவர்களின் குடும்பங்களும் துயரத்துக்குள்ளாகியுள்ளனர். எனவே அவர்களை பிணையில் விடுதலை செய்யப்படவேண்டும்.' இவ்வாறு ஒரு சட்டத்தரணி உருக்கமாக ஒரு நீதிமன்றில் தனது கட்சிக்காரர்களுக்காக வாதாடியுள்ளார்.

களுத்துறையில் அல்லது மட்டக்களப்பில் அல்லது தென்பகுதியில் உள்ள ஏதோ ஒரு சிறையில் விசாரணையின்றி வாடும் தமிழ்க்கைதிகள் சார்பில் யாரோ ஒரு மனிதநேய சட்டத்தரணி இப்படி வாதிட்டார் என்றுதானே நினைக்கிறீர்கள்?

இல்லவே இல்லை...

உடத்தலவின்னவில் பத்துக்கும் அதிகமான முஸ்லீம் மக்களை படுகொலை செய்ததற்காக கைதுசெய்யப்பட்ட, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்தையின் புத்திர பாக்கியங்களான லொகான் மற்றும் சானுக்கவை விடுதலை செய்யக்கோரித்தான் இந்தக்கருணை (?!) மனு.

மனு கருணையுடன் பரிசீலிக்கப்பட்டு அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டும் விட்டார்கள்...

ஆனால் பல்லாண்டு காலமாக சிறையில் விசாரணையோ, விடுதலையோ இன்றி வாடும் அப்பாவித் தமிழ்க்கைதிகளின் குரலும் அவர்களின் குடும்பங்களின் அவலமும் தென்பகுதி நீதிமன்றங்களில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தியதாக இல்லை.

–ஏனென்றால் அவர்கள் தமிழ்க்கைதிகள்....
–எந்தப் படுகொலையையும் பாரதூரமான குற்றங்களையும் செய்யாதவர்கள்
–பாதாள உலகக் கும்பலுடன் இணைந்து இயங்காதவர்கள்
–அரசியல் செல்வாக்கு இல்லாதவர்கள்
–எல்லாவற்றிலும் மேலாக அனாதரவானவர்கள்.....

ஒருவேளை இவர்களுக்கு இத் தகைமைகள் இருந்தால் சிறிலங்கா சட்டங்களும், நீதியும் இவர்களை விடுவித்திருக்கக்கூடும்.

–ஒரு தமிழ்க்கைதி தான் யார் என்ற உணர்வை இழக்கும் அளவுக்கு சிறை வாழ்வு அவனைச் சீரழித்துள்ளது என்ற செய்தி நெஞ்சை நொருக்குகிறது.

அன்னிய நாட்டுச் சிறையில் ஒருவன் கைதியாகவே கூடாது என்ற உண்மையைத்தான் இது உணர்த்துகிறது.



www.eelamview.com

www.eelamview.com

# விலக்கப்படும் இருள்

-அன்புமாறன்-

*"இந்தப்பணி மிகவும் அபாயகரமானது. ஆரம்பத்தில் மிகச்சில தொண்டர்களுடனேயே நாங்கள் இப்பணியை ஆரம்பிக்க வேண்டியிருந்தது."*

கிளிநொச்சியின் பரந்தன் பிரதேசத்தில் இராணுவத்தால் விதைத்துச்செல்லப்பட்ட அபாயகரமான கண்ணிவெடி வயல்களில், மீட்புப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அணி யொன்றின் அருகில் நின்று அதன் பணிப் பாளர் திரு.யோகன் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவின் ஆரம்ப செயற்பாடுகளை எனக்கு விளக் கினார்.



கிளிநொச்சி நகரம் இராணுவ ஆக்கிரமிப் பிலிருந்து மீட்கப்பட்ட 1998 இன் பின்னர், குறிப்பாக 1999 இன் நடுப்பகுதிகளிலிருந்து கிளிநொச்சி மண்ணி லும், மேலும் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட வன்னியின் பல்வேறு நிலப்பரப்பு களிலும் மீளக் குடியமரச் சென்ற மக்கள் மிக அவலமான முறையில், இராணுவத்தால் எங்கும் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிகளினாலும், பொறிவெடிகளாலும் கொல்லப்பட்டும், கால்களை இழந்து அங்கவீனர்களாகவும் போயினர். வெடிபொருட்கள் ஏற்படுத்திய அச்சுறுத்தல் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட தமது பூமியில் மீள்குடியேற ஆவலுடன் வந்த மக்களின் மீது உருவாக்கப்பட்ட நிழல் ஆக்கிரமிப்பாகியது. இராணுவம் தான் வெளியேறிய போதும், வெடிபொருட்களினால் தான் ஏற்படுத்திய நிழல் ஆக்கிர மிப்பில் தொடர்ந்தும் வெற்றியீட்டுவது ஆயிற்று.

*இந்நிலையில் மீட்கப்பட்ட எம் தாயக நிலங்களில் எம் மக்கள் மீளக்குடியேற உதவும் வகையில் அவர்களின் மீதான அச்சுறுத்தலை ஏற்படுத்திக்கொண்டிருந்த கண்ணிவெடிகளையும், வெடிபொருட்களையும் மீட்டு மக்களை மீளக்குடியேற்றம் செய்வதற்காக மிகச் சொற்பமான வளங்களுடன் அபாயகரமான கண்ணிவெடி மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினோம்."*
என்றார் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பிரிவின் கிளிநொச்சி மையப்பணியகத்தில் கடமையாற்றும் அந்நிறுவன ஆரம்பப்பணியாளர் ஒருவர்.

விருப்பார்வத்துடனும், துணிவுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயற்பட முன்வந்த சில உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவு இன்று 150 வரையான தொண்டர்களுடன் வன்னிப் பெருநிலப்பரப்பில் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் 2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் கண்ணிவெடி நிபுணர்களின் நிபுணத்துவம்சார் வழிகாட்டலுடனும் மிட்புப் பயிற்சிகளுடனும் பயிற்றுவிக்கப்பட்ட கண்ணிவெடி மீட்புத் தொண்டர்கள், இன்று தமது பயிற்சி ஆசிரியர்கள் மூலமே பயிற்று விக்கப்படுகின்றனர்.
2000ம் ஆண்டின் ஏப்ரல் முதல் 2002ம் ஆண்டின் மே வரையான காலப் பகுதியில் தொண்ணூற்றி ஏழாயிரம் அளவிலான மிதி வெடிகளும் அறுபதினாயிரம் வரையான வெடிபொருட்களும் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து அகற்றப் பட்டுள்ளன. மீட்கப்பட்ட வெடி பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுதந்திர கண்காணிப் பாளர்கள் முன்னிலையிலும், சர்வதேச - உள்ளூர் பத்திரிகையாளர், கண்காணிப் பாளர்கள் முன்னிலையிலும் தகர்த்து அழிக்கப்படுகின்றன.

*"இரண்டு வருசத்திற்கு முன்னம் கண்ணிவெடியால நிரம்பியிருந்த இந்த வயல்வெளியள் இண்டைக்கு நெல் விதைக்கப்பட்டு செழிச்சிருப்பதை பாக்க எனக்கு சந்தோசமாயிருக்கு."*
கிளிநொச்சியில் கடமையாற்றும் கண்ணிவெடி மீட்பு தொண்டரொருவரின் குதூகலிக்கும் மனநிலை பேசியது.

*"நாங்க இங்க வேலைசெய்யத் தொடங்கேக்க கிளிநொச்சியைப் பாக்கமாட்டியள்"*

*"நாயுருவிப் பத்தையளும் செடிகொடியளும் சடைச்சுக் கிடந்திச்சு"*

*"இண்டைக்கு நகரம் எவ்வளவு கலகலப்பாயிருக்கு. கோயில் வயலெண்டு சனம் சுதந்திரமாத் திரியுது."*

*"இவ்வளவுக்கும் எங்கட இரண்டு வருச உழைப்பும் தியாகமும் அர்ப்பணிப்புந்தான் காரணம்."*

*"இதுவரைக்கும் மீட்பு நடவடிக்கை செய்யேக்க எங்கட ரெண்டு தோழர்களை கண்ணிவெடிக்கு இழந்திட்டம்."*

*"ஆனா ஒருவகையில இந்த நகரத்தினரை மீட்புக்கு நாங்களும் காரணம் என்று நினைக்கேக்க பெருமையாயிருக்கு. திருப்தியாயுமிருக்கு."*

உண்மையில் அந்த நகரின் மீட்பிற்கு அவர்கள்தான் காரணம். அவர்களுடைய உழைப்பும், தியாகமும்தான். கிளிநொச்சி நகரம் உட்பட்ட வன்னிப்பெருநிலப்பரப்பின் கண்ணிவெடி அச்சுறுத்தல் பிரதேசங்களில் 37.6 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவுள்ள இடம் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அபாயம் அகற்றப்பட்ட பிரதேசமாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. 16,367 ஏக்கர் விவசாய நிலம் கண்ணிவெடி வயல்களாக இருந்து மீட்கப்பட்டுள்ளது. அண்ணளவாக 11,364 குடும்பங்கள் தமது சொந்த நிலங்களில் கண்ணிவெடி அச்சுறுத்தல் நீங்கி மீள்குடியேறியுள்ளனர்.

இன்று மனிதநேய கண்ணியகற்றும் பிரிவினரின் செயற்பாடுகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள அதன் மையப்பணியகத்தால் நெறிப்படுத்தப்படுகின்றன. பொதுவாகவே கள ஆய்வுகளின் மூலமும் மக்களினால் கொடுக்கப்படும் அறிவித்தல்கள் மீதான ஆய்வுகளின் அடிப் படையிலும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள், கண்ணிவெடி வயல்கள் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் இனங்காணப்படுகின்றன. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிறிதொரு துணை நிறுவனமான "வெண்புறா" நிறுவனத்தின் அனுசரணையுடன் கண்ணி வெடிப் பகுதிகளாக இனங்காணப்பட்ட பிரதேசங்கள் பொது மக்களிற்கும் பொதுப் பாவனைக்கும் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக முதலில் ஆக்கப்படுகின்றன. எச்சரிக்கை, விழிப்புணர்வுப் பதாதைகள் மூலமும், கண்ணிவெடி இனங்காணப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களிற்கு வழங்கப்படும் கருத்தூட்டல்கள் மூலமும் மக்கள் கண்ணிவெடி விபத்துக்களை தவிர்க்குமாறு



அறிவுறுத்தப்படுகின்றனர். பின்னர் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு, "வெண்புறா" அமைப்பு சர்வதேச ஐ.நா அகதிகள் அமைப்பு (UNHCR) ஐ.நா சிறுவர் நிதியம் (UNICEF) மற்றும் மாவட்டங்களின் அரசசார்பற்ற இணையங்கள் என்பவற்றை உள்ளடக்கிய "கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டு ஆதரவுக் குழு" (MINE ACTION SUPPORT COMMITEE) வினால் கண்ணிவெடி அச்சுறுத்தல் பிரதேசங்களாக இனங்காணப்பட்ட பகுதிகள் மக்கள் மீள் குடியேற்றம், பாவனைக்கான முதநிலை அடிப்படையில் (PERIORITY) தெரிவு செய்யப்பட்டு மனிதநேய கண்ணி வெடிகளகற்றும் பிரிவினரால் கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன.

இதேவேளை சுயாதீனமாக தமது வாழ்விடங்களில் மீள்குடியேறும் மக்கள் கிராம அலுவலர் மற்றும் உதவி அரச அதிபர் ஊடாகவோ அல்லது வெண்புறா நிறுவனத்தில் செயற்படும் பிரதேச மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினரின் அலுவலகம் ஊடாகவோ அறிவிக்கும்போது விசேட கண்ணிவெடி அகற்றும் குழுக்கள் மையப்பணி மனையினால் அனுப்பப்பட்டு குறிப்பிட்ட மக்கள் மீள் குடியேற விரும்பும் பிரதேசங்களில் இருந்து கண்ணிவெடி அகற்றப்படுகின்றது.

*"எனினும், எம்மிடம் உள்ள வளப்பற்றாக்குறை காரணமாகவும், போதியளவு தொண்டர்களை எம்முடன் இணைத்து செயலாற்ற முடியாத பொருளாதார நெருக்கடிகளாலும் மக்களினால் வேண்டப்படுகின்ற பிரதேசங்களில் சில வேளைகளில் வேகமான முறையில் கண்ணிவெடிகளை அகற்ற முடியாமல் போவதுண்டு."*
என்று கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பிராந்தியகள அதிகாரியொருவர் கூறிய வார்த்தைகளும் இங்கே கவனத்திற்குரியனவாகின்றன.

இதேவேளை எதேட்சையாக மக்கள் கண்ணிவெடிகளையோ, வெடிபொருட்களையோ காணுமிடத்து மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் கிளிநொச்சி மையப் பணியகத்திற்கோ, பிரதேசங்களில் உள்ள வெண்புறா நிறுவன தொடர்பகத்திற்கோ அறிவிக்கின்றனர். உடனடியாவே குறிப்பிட்ட இடங்களிற்கு விரையும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் "அவசர மிதிவெடியகற்றும் ஏழுபேர் கொண்ட அணிகள்" மக்களை நடக்கவிருக்கின்ற விபத்திலிருந்து காக்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

சர்வதேச ரீதியில் கண்ணிவெடி அபாயத்தின் மீதான அச்சுறுத்தல் பெருமளவு நிதியை கண்ணிவெடி அகற்றும் பணிக்காக செலவு செய்ய உலகை நிர்ப்பந்தித்துள்ளது. 1999ம் ஆண்டு மட்டும் ஐ.நா வின் கண்ணிவெடி செயற்பாட்டு சேவைப்பிரிவு (UNOPS) 568 மில்லியன் அமெரிக்கப் பணத்தை கண்ணிவெடி அகற்றும் பணிக்காக ஒதுக்கியிருப்பினும், வன்னியில் 1999 முதல் பெருமளவு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு காரணமான மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு சர்வதேச அமைப்புகளினால் எந்தவொரு நிதியுதவியும் வழங்கப்படாதது வருத்தத்திற்குரியதே.

*"நாங்கள் கண்ணிவெடி அகற்றும் பணியை ஆரம்பித்தது முதல் இன்றுவரை தமிழர் புனர்வாழ்வுக் கழகமே எமக்கான எல்லா நிதி உதவிகளையும் செய்து வருகின்றனர்."*

*"இன்று ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் மக்கள் வேகமாக மீள்குடியேற விரும்புகின்றனர்."*

*"மக்களின் வேகமான மீள்குடியேற்றத்திற்கு ஏற்ப எமது பணியை விஸ்தரிக்க வேண்டியுள்ளது."*

*"ஆனால், இன்றைய சூழ்நிலையில் எமது பணியை விஸ்தரிப்பதற்கு தேவையான, போதியளவு நிதியை தருவதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மிகவும் சிரமப்படுகின்றது."*

*"உண்மையில் அவர்கள் தமது நிர்வாக செலவுகளைக் கட்டுப்படுத்தியே எமது பணிக்கான நிதியை வழங்கி வந்தனர்."*

*"கண்ணிவெடி அகற்றும் பணிக்கென சர்வதேச சமூகத்தால் விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் இன்னும் பெருமளவு எமக்கு உதவ முடியும்."*
என மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் எதிர் கொள்ளும் தற்போதைய நெருக்கடியை விபரித்தார் அவ் அமைப்பின் பணிப்பாளர்.

ஆனாலும், இப்போது ஏற்பட்டுள்ள ஒரு சிறு நம்பிக்கை தரும் விடயம் என்னவெனில் இதுவரை காலமும் இங்கே செய்யப்பட்ட கண்ணிவெடி மீட்புப்பணியை கண்ணுற்ற உலகளாவிய கண்ணிவெடி அமைப்புக்கள் சில, குறிப்பாக லண்டனை தலைமையகமாகக் கொண்ட மனிதநேய கண்ணிவெடி (MINE ADVISARY GROUP) மற்றும் நோர்வேஜியன் மக்கள் உதவி நிறுவனமும் (NORWAGIAN PEOPLES AID) மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கான நவீன கண்ணிவெடி மீட்பு முறைமைகளுக்கான பயிற்சிகளை அளிக்க முன்வந்து அவற்றை நடைமுறைப் படுத்தியும் வருகின்றன.

உலக மனிதநேய அமைப்புக்களினதும், நபர்களினதும் கவனத்தை தம் வசம் ஈர்க்கத் தொடங்கிவிட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் துணை நிறுவனமான மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இதுவரை காலமும் முற்றுகையிடப்பட்டிருந்த எம் தேசத்தின் வாசல்களின் உள்ளே, மீட்கப்பட்ட மண்ணில் மீள்குடியேறத் துடித்த மக்களிற்காக ஆற்றிய பணிகள் உயரியன. கண்ணி வெடிகளின் முன் தமது உயிரைப்பணயம் வைத்து கடந்த இரண்டு வருடங்களாக அதன் தொண்டர்கள் நிகழ்த்திவரும் போராட்டம் அதிசயிக்கத்தக்கது. இன்று உலகு ஆச்சரியப்படும் விதத்தில் எம் மக்கள் மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று மீட்கப்பட்ட தம் தாயகப்பிரதேசங்களில் சுயமாகவே மீள்குடியேறு கின்றனர். அந்த மக்களின் வாழ்விற்காக தனது மூன்று பணியாளர்களை கண்ணி வெடிக்கு இழந்துவிட்டிருப்பினும் கூட தொடர்ந்து சுதேச வளங்களுடன் பணியாற்றும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் போராட்டம் பெருமைக்குரியதே.



www.eelamview.com


www.eelamview.com

உடன்பாடு காணப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்த விதிகளை சிறிலங்கா அரசாங்கம் நடைமுறைப்படுத்தாத நிலையிலும் தலைவர் பிரபாகரன். அவர்கள், சமாதானத்தை அதன் வளர்ச்சியை நோக்கி அடுத்த கட்டத்திற்கு நகர்த்த உதவியுள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான சிங்கள அரசாங்கத்தின் தூதுக்குழுவினரை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சந்தித்து தாய்லாந்துப் பேச்சுவார்த்தைக்கான நாளைக் குறிப்பிட ஒத்துழைத்ததன் மூலம் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது சமாதான உறுதிப்பாட்டை சர்வதேசத்திற்கு மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் - அரசியல் தீர்வு என மூன்று கட்டங்களாக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதலாம் கட்டம் வெற்றிகரமாக அமைந்திருந்தாலும், அவை பூரணமாக அமுல்படுத்தப் படவில்லை என்பது புலிகளின் பிரதான குற்றச்சாட்டாகும். எனினும், சமாதானத்தின் எதிர்காலத்தை நம்பிக்கை தரும் வகையில் நிட்சயப்படுத்துவதற்காக புலிகள் இயக்கம் ஒரு விட்டுக்கொடுப்பைச் செய்து சிங்கள அரசாங்கத்திற்கு மேலும் ஒரு கால அவகாசத்தை வழங்கி, தாய்லாந்துப் பேச்சு என்ற இரண்டாவது கட்டத்திற்குள் நுழைய





# நம்பிக்கையுடன் நடைபோடும் சமாதானப் பயணம்

இச்சந்திப்பில், புலிகள் இயக்கத்தின் சார்பில் அரசியல் ஆலோசகரும் - தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அடேல் பாலசிங்கம் அவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தை எதிர்வரும் செப் 12 - 17ம் திகதிகளுக்கிடையில் குறித்த ஒரு நாளில் நடைபெறவுள்ளது.

நோர்வே விஜயத்தின்போது திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளமையும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

சிங்கள அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் - புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே வெற்றிகரமாக நடந்து முடிந்த இந்தச் சந்திப்பின் விளைவாக புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கம் பற்றிய அறிவிப்பை சிறிலங்கா அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. செப்ரெம்பர் முதலாம் திகதியளவில் தடை நீக்கம் பற்றிய அறிவிப்பு வெளிவரும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேரடிப் பேச்சுவார்த்தைக்கான தடைக்கல்லை அகற்ற உதவும் இந்தத் தடை நீக்க அறிவிப்பை புலிகள் இயக்கம் வரவேற்கின்றது. அதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்தை புலிகள் இயக்கம் பாராட்டுகின்றது.

வரும் செப்டெம்பரில் வன்னி வரவுள்ள திரு. பாலசிங்கம் அவர்கள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து தாய்லாந்துப் பேச்சுக்கள் பற்றிய ஆலோசனைகளையும் - கருத்துப் பரிமாற்றங்களையும் நடாத்தவுள்ளார்.

தாய்லாந்துப் பேச்சின் பிரதான விடயமாக இடைக்கால நிர்வாகம் பற்றிய அதிகாரங்கள் மற்றும் அவை தொடர்பான விடயங்கள் பற்றிய முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது. அரசாங்கம் விரும்பினால் அரசியல் தீர்வு பற்றிய விடயங்களையும் பேச புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது.

போர் நிறுத்த உடன்பாடு - சம்மதித்திருந்தது.

ஆனால், தாய்லாந்துப் பேச்சுக்களில் எட்டப்படும் விடயங்களை சரியாக அமுல் படுத்துவதிலும் - அதே வேளை குறித்த கால அவகாசத்தினுள் போர் நிறுத்த உடன்பாட்டை முழுமையாக அமுல்படுத்துவதிலும் அரசாங்கம் தீவிர அக்கறை காட்டவேண்டும் என்று புலிகள் இயக்கம் எதிர்பார்க்கின்றது. அப்போதுதான் சமாதானப் பயணம் வெற்றிகரமாக அதன் இறுதிக் கட்டத்திற்குள் நுழைய முடியும்.

இதேசமயம், கடந்த 6 மாதகாலமாக இருபகுதியினருக்கும் இடையே இழுபறிநிலையில் இருந்து வந்த கிழக்குமாகாணத்திற்கான புலிகளின் கடற்பயண விடயம், இறுதியில் சுமூகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. இப்போது ஆயுதம் தாங்கிய கடற்புலிகளின் படகுகள் கிழக்கு மாகாணத்திற்கான கடற்போக்கு வரத்தை ஆரம்பித்துள்ளன.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர் தாயகத்தின் நிலப்பரப்பில் புலிகள் இயக்கத்திற் கிருந்த அரசியல் - இராணுவ இறையாண்மையை,

**- எல்லாளன் -**

இந்தக் கடற்பயண நடைமுறை மூலம், தமிழரின் கடற்பரப்பிலும் சிங்கள அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது தமிழினத்திற்கு நல்லதொரு அரசியல் வலுவைக் கொடுத்துள்ளது. எதிர் காலத்தில் நடைபெறவுள்ள அரசியல் பேச்சுவார்த்தைகளின் போது, பேச்சு வார்த்தை மேசையில், தமிழினத்தின் தேசிய அபிலாசைகளை உறுதிப்படுத்த இது உதவும் என்பது திண்ணம்.

தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழினத்தின் அடிப்படையான அரசியல் நிலைப்பாடு விட்டுக்கொடுப்பிற்கோ - சமரசத்திற்கோ உரியவை அல்ல. அவைதான் தமிழினத்தின் அரசியல் தலைவிதியை இத்தீவில் நிலை நாட்டவுள்ள ஜீவாதார விடயங்களாகும்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களது அமெரிக்க விஜயம் பேரினவாதிகளால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் பயணமாக இருந்தது. ஆயினும், சிங்களப் பேரினவாதிகள் எதிர்பார்த்தது போல புலிகளுக்கு எதிராக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் எந்த ஒரு கருத்தையும் கூறவில்லை. மாறாக, புலிகள் இயக்கத்துடன் பேசி இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும்படி ரணில் விக்கிரமசிங்காவை அமெரிக்கா வற்புறுத்தியிருந்தது.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு புலிகள் இயக்கத்திற்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கப் படுகின்றது. புலிகள் இயக்கத்தை தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகளாக அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதே யதார்த்தமாகும். புலிகள் இயக்கத்திற்கு இப்போது உலக ஆதரவு படிப்படியாகப் பெருகி வருகின்றது. என்பதையே இது காட்டுகின்றது.

ஜப்பானிய நாட்டுத் தூதுவர் உட்பட உலக நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் உலக நிறுவனங்களின் தலைவர்களும் வன்னி வந்து புலிகள் இயக்கத்துடன் கலந்துரையாடல்களை நிகழ்த்திச் செல்கின்றனர். இச்சந்திப்புக்களின் வாயிலாக புலிகள் இயக்கத்திடமுள்ள சமாதான விருப்பம் - தமிழரின் அரசியல் அபிலாசைகளில் அவர்கள் காட்டும் நேர்மையான நிலைப் பாடுகளையும் அவர்கள் உலகறியச் செய்விக்கின்றனர். இது முன்னரைப் போலில்லாது சிங்கள அரசாங்கத்தை பல வகைகளிலும் அழுத்தி வருகின்றது. புலிகளுக்கு எதிராக விசமத்தனமான கருத்துக்களைத் தெரிவித்து வருபவர்களை வாயடைக்கவும் செய்து வருகின்றது.

சர்வதேச சூழல் புலிகள் இயக்கத்திற்குச் சாதகமாக மாறிவரும் இக்கால சூழலில் தமிழ் நாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் அங்கே புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டுவருவது ஒரு வரலாற்றுச் சோகமாகும். அவரது நடவடிக்கைகள் இப்போது சிங்களப் பேரினவாதிகளை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கிவருகின்றன.

பலவருட இன்னல்கள் - துயரங்களுக்குள் இருந்து ஈழத்தமிழர் ஒரு அரசியல் ஆதாயத்தை அடைய முயலும் இந்த வேளையில் ஈழத்தமிழருக்கு எதிராக - அவர்களது விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முயலும் வகையில் அவர் செயற்பட்டு வருவதை தமிழர்களின் வரலாறு மன்னிக்காது.

ஈழத்தமிழினத்தைப் பொறுத் தவகையில் இது ஒரு முக்கியமான வரலாற்றுக் காலகட்டமாகும். தமிழரின் அரசியல் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக சர்வதேச சமூகம் ஆதரவு கொடுக்க முயலும் இக்கால கட்டத்தில் தலைவர் பிரபாகரனது கரத்தைப் பலப்படுத்தி எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் - பாராளுமன்ற தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் அணிதிரண்டு - ஒரு அணியாகச் செயற்பட்டு வருவதன் மூலம் ஈழத்தமிழினம் பாரிய அரசியல் வெற்றியைப் பெற்றுக்கொள்ளமுடியும். •



www.eelamview.com

www.eelamview.com

# கடலை வெற்றிகொள்ளும் உலகின் முதல் விடுதலைப்போர் கடற்சேனை



நாங்கள் கடலால் சிறைப்படுத்தப் பட்டிருந்தோம். கடல்தான் எம் தேசத்தின் பலமாக இருந்தது. ஆனாலும் கடலில் நாம் பலமற்றிருந்ததால் அந்தப் பலமே எமது பலவீனமானது. எங்கள் வாழ்வையும் அதற்கான போரையும் எதிரி கடல்கொண்டே முற்றுகையிட்டான். எங்களுக்கென்றிருந்த ஒரே தரைத்தொடர்பும் சிறிலங்கா என்ற சிங்கள தேசத்துடன் மட்டுமேதான்.

எங்களது தலைவிதியைத் தீர்மானிப்பதாய் கடல்தான் இருந்தது. அந்தக் கடலில் எதிரியைக் கட்டுப்படுத்தும் பலம் பெறாதவரை நாம் தரையில் வெறும் அச்சுறுத்தும் போரை நடத்தமுடியுமே அன்றி எதிரியின்மீது எமது இராணுவ மேலாண்மையை நிலை நிறுத்த முடியாது. ஆனாலும் ஒரு விடுதலைப்படையால் தரையைப் போலவே கடலிலும் போரிட முடியுமா? எமது இனத்தின் எதிர் காலத்தின் முன் வீழ்ந்த வினாக்குறி இது. ஏனெனில் அப்படியொரு அதிசயம் உலகில் எந்தவொரு விடுதலைப் போரின் போதும் நிகழ்ந்த தில்லை.

அசாத்தியமானதென பலராலும் கருதப்பட்ட முயற்சித்தல்களில் எமது விடுதலை இயக்கம் குதித்திருக்கிறது. அவ்வாறு நிகழ்ந்தவற்றுள் பிரதானமானது எமது விடுதலை இயக்கத்தின் கடற்பிரசன்னமாகும்.

அவை எமது விடுதலைப் போரின் ஆரம்ப காலங்கள். எண்பத்து மூன்றுயூலையுடன் எமது போராட்டக் குழந்தை உடம்பு பிரட்டியிருந்தது. தமிழீழத்தின் நிலப்பரப்பெங்கும் எதிரிகளை அச்சுறுத்தும் தாக்குதல்கள் தீவிரம் பெற்றுக்கொண்டிருந்தன. அதற்குப் பின்பலமான செயற்பாடுகளிற்காகத்தான் நாம் முதலில் கடலுள் இறங்கியிருந்தோம். அப்போது நாம் தமிழ்நாட்டை பின்தளமாகக் கொண்டிருந்ததால் அதனுடனான தொடர்புகளுக்கு எமது கடல் பயன்படத் தொடங்கியது. சிறியதொரு இயந்திரம் பொருத்தப்பட்ட 'கடற்புறா' எனப் பெயரிடப்பட்ட பாய்மரப் படகுதான் எமது ஆரம்பக் கடற்கலம். அதன்பின்னர் சர்வதேசத் தொடர்புகளிற்காக 'சோழன்' என்ற சிறிய கப்பலும் இரகசியமாக எமது விடுதலைப் போருக்கு பலம் சேர்த்தபடியிருந்தது.

அப்போதெல்லாம் கடலில் நாம் ஒரு தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தோம். எமது விடுதலை இயக்கத்தைக் கட்டிவளர்ப்பதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதே 'கடற்புறா'வின் ஒரே பணி. அவ்வப்போது சிங்களக் கடற்படை மீது கடற்கண்ணிவெடித் தாக்குதல்களும் நிகழ்த்தப்பட்டன. அந்தத் தலைமறைவு நாட்களில் எம் போருக்காக கடலோடி எத்தனையோ வீரர்கள் கடலின் மடியில் தம்முயிர்களை உரமாக்கினர்.

ஆழ்கடற்பரப்பில் பாரிய கண்காணிப்புக் கலங்களை நிறுத்தி வைப்பதன் மூலம் எமது படகுகளை இனங்கண்டு எதிரி தாக்குதல்களை நடத்தினான். பல போராளிகளின் உயிரிழப்பிற்கு காரணமாகி எமது கடற்பயணத்திற்கு அச்சுறுத்தலாக எதிரியின் இச்செயற்பாடு அமைந்தது. தீவிரத்தனமான எதிரியின் இச்சவாலுக்கு இரண்டாம் ஈழப்போர் வெடித்த சில மாதங்களுள்ளேயே அடிவீழுந்தது. 1990.07.10 அன்று 'எடித்தாரா' என்ற கட்டளைக் கப்பல் மீது கடற்கரும்புலிகள் தமது உயிர்கொண்டு வெடித்தனர். முதலில் தரையில் பயன்படுத்தப்பட்ட 'உயிராயுத'த்தை கடலில் பிரயோகிக்கும் உத்தியை ஆரம்பித்ததானது கடற்போரில் புதியதொரு பரிமாணத்திற்கு வித்திட்டது. அன்று எமது இயக்கத்தின் இக்கடல் நடவடிக்கைகளுக்கு கேணல் சங்கர் அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டார்.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் முக்கிய திருப்பங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அதுவரை தரையை மையப்படுத்தியிருந்த எதிரியின் வியூகங்கள் ஆட்டம்காணத்தொடங்கின. தரையில் தனித்திருந்த இராணுவ முகாம்கள் எமது போராளிகளின் இறுக்கமான முற்றுகைக்குள் சிக்கி மூச்சுத் திணறவேண்டியதாயிற்று. யாழ்ப்பாணத்தில் கோட்டை, மட்டக்களப்பில் கும்புறுமுளை இராணுவமுகாம், முல்லைத்தீவில் கொக்காவில் இராணுவமுகாம், மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி இராணுவமுகாம் என்பன அடுத்தடுத்து எம்மிடம் வீழ்ச்சிகண்டன. அத்துடன் இவ்வாறான தனித்த முகாம்களிலிருந்து எதிரி தானாகவே பின்வாங்கிக் கொண்டான். தரைப்போரில் நாம் அடைந்த போரியல் வளர்ச்சி தரையில் தனித்த முகாம்களை சிங்களப் படையால் வைத்திருக்க முடியாது என்ற புதிய இராணுவ யதார்த்தத்தைத் தோற்றுவித்தது. இந்நிலை ஈழப்போரில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த திருப்பத்திற்கு வித்திட்டது.

அதுவரை தரையை மையப்படுத்தியதாக அமைந்திருந்த எதிரியின் ஆக்கிரமிப்பு மூலோபாயம் எமது விடுதலைப்படையால் உடைக்கப்பட்ட கடலை மையப்படுத்தியதான புதிய மூலோபாயத்தை வகுத்தான். இப்போது கடற்தொடர்போடு கூடிய கூட்டுப்படைத்தளங்கள் எமது மண்ணில் எதிரியால் நிறுவப்பட்டன. ஏற்கனவே இருந்த அவ்வாறான முகாம்களான முல்லைத்தீவு, சிலாபத்துறை போன்றவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட எமது தாக்குதல்கள் எதிரியால் முறியடிக்கப்பட்டிருந்தன. இத்தகையதொரு நெருக்கடி வாய்ந்த சூழலில் எம்மீது மேலும் பாதகங்கள் சூழ்ந்து கொண்டன. சர்வதேச, பிராந்திய அரசியல் சூழல்கள் எமக்குப் பாதகமாக இருந்தன. மறுபுறம் போராட்ட வரலாற்றில் அதுவரை நிகழ்ந்திராத மாபெரும் சமர்க்களமான ஆனையிறவுச் சமரில் நாம்



பின்னடைவைச் சந்தித்திருந்தோம். அந்த மாபெரும் சமரின் தொடக்கத்தில் நாம் அடுத்தடுத்து வெற்றிகளைப்பெற்று, முகாம் வீழ்ச்சியுறும் நிலையை அடைந்தபோதும் ஈற்றில் எதிரி தன் கடற்பிரயோகத்தின் மூலம் அதை முறியடித்திருந்தான். அப்போது பல ஆய்வாளர்கள் எமது போரியல் வளர்ச்சிப்போக்கு இத்தோடு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் எனச்சொன்னார்கள். அல்லது எமது அழிவிற்கான இறுதி நாட்களை எண்ணச்சொன்னார்கள்.

உலகில் நடந்த விடுதலைப் போராட்டங்களெல்லாம் தம்மீது நெருக்கடிகள் சூழ்ந்து கொண்டபோது காடுகளையும், மலைகளையுமோ அல்லது வேற்று நாடுகளையோ தமது புகலிடங்களாக்கிக்கொண்டன. ஆனால் எமது தலைவர் அவர்களோ மறைப்பும், காப்புமற்று பரந்து விரிந்திருந்த கடற்பரப்பில் போரிடத் துணிந்தார். சவால்களைக்கண்டு தப்பியோடுவதல்ல, அவற்றை எதிர்கொள்வதே வெற்றிக்கான ஒரே வழி என்ற எம் தலைவனின் சிந்தனையிலிருந்துதான் சிங்களத்தின் புதிய ஆக்கிரமிப்புப் போர்த்திட்டத்திற்கு சவாலாக எமது விடுதலை இயக்கத்தில் பலமான கடற்படைக்கட்டுமானம் தோற்றுவிக்கப்பட்டது.

1991 – ஓகஸ்ட் பிற்பகுதியில் "விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்" என்ற நாமத்துடன் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கடற்போர்ச்சேனை தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அதன் சிறப்புத்தளபதியாக கேணல் சூசை அவர்கள் நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து எம் தலைவரின் நாட்கள் இரவு பகலென்றில்லாது கடலிலேயே கழியத்தொடங்கின. கடலில் எம்மால் வெல்லமுடியும் என்ற நம்பிக்கையை போராளிகளுள் ஊட்டுவதற்காய் அவர்களுள் ஒருவராய் எம் தலைவர் வாழ்ந்தார்.

கடலில் போராளிகளுக்கான கூட்டுப் பயிற்சியிலிருந்து நீச்சற்பயிற்சி, படகோட்டுவது, எதிரிக் கலங்களை வியூகமிடுவது என அத்தனையையும் தன் சிந்தனைக்கேற்ப நேர்நின்று பயிற்றுவித்தார். எதிரியும் அவசர அவசரமாகவே எம் கடற்குழந்தையை செயற்பட விடாமல் நிர்ப்பந்திக்கும் களச்சூழலை ஏற்படுத்தினான். விடுதலைப் போரின் இயங்கு தளமாக விளங்கிய யாழ்.குடா நாட்டை முற்றாக வெற்றிகொள்வதற்கான வியூகங்களை வகுத்து எதிரி செயலில் இறங்கினான். 1991.10.17 அன்று காரைநகரிலிருந்து பூநகரி வரையான கரையோரப் பகுதிகள்மீது 'வலம்புரி' என்ற பெயரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குடாநாட்டு முற்றுகை இறுக்கப்பட்டது. இறுதியாக மக்கள் பயணம் செய்த கொம்படி – ஊரியான் பாதையையும் 1992.06.26ல் வெற்றிலைக் கேணியிலிருந்து படையெடுத்த எதிரி கைப்பற்றிக் கொண்டான். யாழ்ப்பாணத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான தரைத்தொடர்புகள் சிங்களத்தால் வெற்றிகொள்ளப்பட்டுவிட்டன.

குடாநாட்டின் கழுத்தில் சுருக்கிடப்பட்டிருப்பதாகவும் யாழ்ப்பாணத்தார் இனி புல்லைத்தான் தின்னவேண்டுமென்றும் சிறிலங்காவின் அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க கூறுரைத்துக்கொண்டிருந்தார். கிளாலி கடல்நீரேரி வழியாக ஒரு போக்குவரத்துப் பாதையைக் கண்டறிந்து மக்கள் பயணிக்கத் தொடங்கினர். எம்மக்களின் வாழ்விற்கான ஒரே நம்பிக்கையாக எஞ்சியிருந்த அந்த நீரேரிப்பாதையும் சிறிலங்கா அரசால் தடைசெய்யப்பட்டது. வேறு வழியின்றி தம்முயிரைப் பணயம் வைத்த மக்கள் சிங்களக் கடற்படையால் வெறியாடப்பட்டனர். தம் வாழ்விற்கான வேறு மார்க்கமற்று

> “இந்தப் பத்து ஆண்டுகளில் நாம் சாதித்தவை சிறுதுளி. ஆனால் எமது தலைவரின் எண்ணத்தில் இருப்பதோ பெரும்பணி. வீரச்சாவடைந்துவிட்ட எமது 163 கடற்கரும்புலிகள் உட்பட 1066 கடற்புலி மாவீரர்களினதும் வழிநடந்து அந்தப் பெரும்பணியை நாம் நிறைவு செய்வோம்.”
>
> – கடற்புலிகளின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புத் தளபதி கேணல் சூசை –



www.eelamview.com

www.eelamview.com





மீண்டும் மீண்டும் அபாயம் நிறைந்த அக்கடல்நீரேரி வழியே எம்மக்களின் வாழ்க்கைப்படகு அசைந்துகொண்டிருந்தது.

எத்தனை அபாயம் நிறைந்தபோதும் கடலே எமக்குத் தஞ்சமானது. அப்போதுதான் பிறப்பெடுத்திருந்த எங்களது கடற்குழந்தைகள் எமது காவலர்களானார்கள். கிளாலி நீரேரியில் தமது உயிரை வைத்துச் சமராடிய கடற்புலிகள் மக்களின் உயிர்காக்கும் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டார்கள். சிங்களத்தின் கடற்போர்க் கலங்களுக்கும் தமிழரின் உயிர்சுமந்த வெடிமருந்துக்கலங்களுக்கும் இடையிலான பலப்பரீட்சையில் தமிழரின் கடற்படை தன் பிரகாசமான எதிர்காலத்திற்கான அத்திவாரத்தை அமைத்துக்கொண்டிருந்தது. எம்மக்களையும், விடுதலைப்போரையும் காத்து எதிரியால் உடைக்க முடியாதபடி கடலில் தமது உயிரால் வேலியமைத்தார்கள் கடற்புலிகள்.

கிளாலியில் கடற்புலிகளின் பாதுகாப்பு வியூகத்தை உடைக்க முடியாத எதிரி ஈற்றில் ஒரு தரை நடவடிக்கை மூலம் கிளாலி இறங்குதுறையைக் கைப்பற்றிவிட முனைந்தான். அதற்காக 'யாழ்தேவி' என்ற பாரிய நடவடிக்கையும் எம்மீது பிரயோகிக்கப்பட்டது. புலிப்படையணிகள் அதை உறுதியாக வெற்றிகொண்டன. எனினும் இன்னமும் மீட்கப்படாத மக்களின் வாழ்வு கடற்புலிகளை நம்பியே காத்திருந்தது.

நவம்பர் 10.1993. குடாநாட்டின் முற்றுகையை இறுக்கியிருந்த பூநகரி கூட்டுப்படைத்தளம்மீது கடற்புலிகளும், தரைப்புலிகளும் இணைந்த தமிழீழத்தின் கூட்டுப்படைகள் போர்தொடுத்தன. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அச்சமர்க்களத்தில் இரண்டே வயதான எமது கடற்புலிகள் சிங்களக் கடற்படைமீது உறுதியான வெற்றியை ஈட்டினர். சிறிலங்காக் கடற்படையின் பெறுமதிவாய்ந்த கடற்கலங்கள் கடற்புலிகளின் கைகளிற்கு மாறிக்கொண்டது. சிங்களத்தின் முற்றுகைப் போர்த்திட்டம் இச்சமர் மூலம் ஆட்டம்கண்டது.

இரண்டாம் ஈழப்போரில் சிங்களம் வகுத்திருந்த போர்மூலோபாயம் கடற்புலிகளின் வளர்ச்சியால் அர்த்தமிழந்தது. தமிழீழக் கடற்பரப்பெங்கும் கடற்புலிகள் காத்திரமான சாதனைகளைப் படைக்கத்தொடங்கினர். மூன்றாம் ஈழப்போர் மூண்டபோது கடலில் எதிரியை அச்சுறுத்தக்கூடிய நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கடற்கெரில்லாப்படையாக கடற்புலிகளை எமது விடுதலை இயக்கம் கொண்டிருந்தது.

மூன்றாம் ஈழப்போரில் யாழ்.குடாநாடு முற்றாகவே எதிரியிடம் வீழ்ந்துபோனது. மீண்டுமொருமுறை எமது முடிவிற்கான நாட்களை அவர்கள் எண்ணத்தொடங்கினார்கள். உண்மையில் ஈழப்போரில் எதிரிகண்ட முக்கியத்துவமான வெற்றியது. குடாநாடு தமிழீழத்தின் மிகச்சிறிய மாவட்டமேயானாலும் அது விடுதலைப்போருக்கான பலமான ஆள்வலுவையும், பொருளாதார வலுவையும் கொண்டிருந்த தமிழர்களின் அரசியல்மையம். கெரில்லா அமைப்பாக இருந்து மரபுப்போர் அம்சங்களை உள்ளடக்கிய புதிய வடிவங்களை போரில் கையாண்டு வேகமாக முன்னேறிக்கொண்டிருந்த எமது இயக்கத்தின் வளர்ச்சிப்போக்கை இப்போர்மைய இழப்பு மோசமாகப் பாதிக்கவல்லது. அதனால்தான் போரியல் வல்லுனர்கள் வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால் இப்பின்னடைவு விடுதலைப்புலிகளை மீண்டும் கெரில்லாக்களாக மாற்றிவிடும் என நம்பினர்.

ஆனாலும் எமது தலைவிதியை வெற்றிகரமாகத் தீர்மானிக்க எங்களால் முடிந்தது. போரில் வீழ்வோமன்றி சரணடையோமென எம் வாழ்வின்மீது வரித்துக்கொண்ட அசையாத கொள்கையால் ஆழ்கடலில் மூழ்கி முக்குளித்தபோதும் நாம் எழுந்து போரிட்டோம். எம்வாழ்வில் திணித்த நிர்ப்பந்தத்தின் மூலமே எமது வளர்ச்சிக்கும் எதிரி நிர்ப்பந்தித்தான். எமது போராட்ட வரலாற்றில் நாம் கண்ட சாதனைகளுக்கு முன்னால் எப்போதும் பின்னடைவுகளை நீங்கள் காணமுடியும். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மாபெரும் பின்னடைவும் அதற்கு விதிவிலக்காய் அமையவில்லை.

குடாநாட்டு ஆக்கிரமிப்பை அர்த்தமற்றதாக்குவதாயின் அதற்கான உயிருட்டியாக விளங்கிய கடல்வழி விநியோகத்தின்மீது எமது மேலாண்மையைப் பெற்றாகவேண்டும். எமது கடல் வலிமையை மேலும் உயர்த்தும் முயற்சியில் தலைவர் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டார்.

கடற்புலிகளில் பல உட்கட்டுமாணங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்கனவேயிருந்த கட்டுமாணங்கள் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் வேகமாக வளர்த்தெடுக்கப்பட்டன. இவ்வாறே எதிரியும் தனது கடற்படையை வலுவாக்கிக் கொண்டிருந்தான். மொத்தத்தில் கடலில் மேலாண்மைபெற வல்லவரால் ஈழப்போரில் உச்சமான மாற்றங்களை நிகழ்த்தமுடியும் என்றநிலை. நவீனம் வாய்ந்த ஒரு அரச கடற்படைக்கும் சிறியதொரு இனத்தின் விடுதலைக்கான கடற்பிரிவிற்கும் இடையில் நிகழ்ந்த இப்பலப்பரீட்சையை கற்பனைகளால் உணர்ந்துகொள்ளமுடியுமா?

1996 யூலையில் முல்லைத்தீவு இராணுவத்தளம்மீது எமது கடற்படையும் தரைப்போரணிகளும் இணைந்து நடத்திய 'ஓயாத அலைகள் – 01' என்ற வெற்றிச்சமர் சிங்களத்தின் மனக்கோட்டையில் முதல் இடியை இறக்கியது. முல்லைத்தீவு மீட்புடன் எமது செயற்பாடுகளுக்கு வாய்ப்பான ஒரு நீண்ட கடற்பரப்பில் கடற்புலிகள் ஆதிக்கம் பெறமுடிந்தது. அப்போது எழுந்த அச்சுறுத்தல் சிறிலங்காப் படைவலுவின் உயிர்வழியில் ஒரு புற்றுநோய் போன்று படிப்படியாக உருப்பெறத் தொடங்கியது.

தமிழீழப்போரில் முதன்முதலில் கடலில் ஒரு கட்டுப்பாட்டுப்பரப்பு ஏற்படுத்தப்பட்டது. எமக்குத் தேவையான விநியோகப் பணிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன் எதிரியின் யாழ் ஆக்கிரமிப்பிற்கான விநியோகத் தொடரணிகள்மீது கடற்புலிகள் வெற்றிகரமான தாக்குதல்களை தொடர்ச்சியாக நடத்தினர். கடற்புலிகளின் கட்டுப்பாட்டுக் கடற்பரப்பினுள் பிரவேசிக்கும் சிறிலங்காக் கடற்படையினர் அதனுள்ளிருந்து மீளும்வரை புத்தபகவானை இடையறாது பிரார்த்திக்கவேண்டியிருந்தது. உண்மையாகவே அப்படியான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.

கடற்புலிகளின் அசாத்திய ஆற்றலால் யாழ் குடாநாட்டில் சிங்களம் கண்டிருந்த காத்திரமான வெற்றி அர்த்தமிழக்கச் செய்யப்பட்டது. புலிகளின் செயற்திறனை, தலைவர் பிரபாகரனின் அசாத்திய வழிநடத்தலை கருத்தில் கொள்ளாது சிறிலங்காத் தலைமை எடுத்த முட்டாள்தனமான முடிவு என சிங்களத்தின் குடாநாட்டு வெற்றி இழிவுபெற்றது. அரசியல் மைப்படுத்தப்பட்டுவிட்ட குடாநாட்டுப் பிரவேசத்திலிருந்து மீளமுடியாத நிலையில் சிங்களம் தவிக்கத் தொடங்கியது. சீரான விநியோக வழியற்ற நிலையில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட போர்த்திறன் வாய்ந்த முன்னணிப் படைகளைக்கொண்ட சிங்களத்தின் உயர் போர்வலு சப்பாணிபோல் அசைவற்று முடங்கியது. கடற்புலிகளின் ஆற்றலால் சிங்களத்தின்மீது விடுக்கப்பட்ட சவால் போரில் தவறான திட்டமிடல்களுக்கு அதை நிர்ப்பந்தித்தது.

"நாம் கடலில் மட்டும் தங்கியிருக்கவில்லை. யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை அமைப்பதற்கான யுத்தம் விரைவில் தொடங்கப்படும்." என சிறிலங்காவின் அன்றைய போர்க்கதாநாயகனான பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த விடுத்த அறிக்கை கடலில் கடற்புலிகள் கொண்டிருந்த மேலாண்மைக்கு சான்றுபகர்ந்தது. இந்நிலை 'ஜெயசிக்குறு' என்ற சாத்தியமற்ற பாதைதிறப்பு யுத்தத்திற்கு சிங்களத்தை நிர்ப்பந்தித்தது. தற்கொலைக்கொப்பான இம்முயற்சியில் இறங்கவேண்டாமென்ற போரியலாளர்களின் யதார்த்தமான ஆலோசனையையும் சிங்களத்தால் நிராகரிக்க வேண்டியிருந்தது.

தவிர்க்கவியலாதபடி வன்னியின் இதயம்மீது எதிரி அகலக்கால்வைத்தான். எதிரியை ஒரு தவறான திட்டமிடலுக்கு நிர்ப்பந்தித்து நாம் வெற்றிகண்டோம். அந்தப் பெரும்போரில் நாம் வெற்றியீட்ட கடற்புலிகள் கடலிலும் நிலத்திலுமாக உழைத்தார்கள். 'ஜெயசிக்குறு' களம் நோக்கி ஆயிரக்கணக்கான போராளிகளை மட்டக்களப்பு, திருமலைப் பிரதேசங்களில் இருந்து வன்னிக்களம் நோக்கி ஆழ்கடலினூடு கடற்புலிகள் நகர்த்தினர். ஈற்றில் 'ஓயாத அலைகள் – 03' என எழுந்த பிரவாகத்தில் சிங்களத்தின் மனக்கோட்டைகள் எல்லாமே அள்ளுண்டு போயின. அதன் படைக்கட்டுமாணம் சிதைந்துபோனது.

தமிழ்சேனை அடுக்கடுக்காக வெற்றிகளைக்குவித்து முன்னேறியது. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவுத் தளத்தை வீழ்த்திய எமது தலைவரின் போரியல் வியூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை கடற்புலிகள் வெற்றிகரமாகச் செய்துமுடித்தனர். வரலாற்றுப் புகழ்மிகு குடாரப்புத் தரையிறக்கத்தின்மூலம், ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை எதிரியின் கடல், தரை வியூகங்களை ஊடறுத்து வெற்றிகரமாகத் தரையிறக்கி உலகக் கடற்போர் வரலாற்றில் கடற்புலிகள் முக்கியத்துவம் பெற்றனர். ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புக் கருவியாக மட்டுமே அதுவரை பயன்பட்ட கடல் எமது விடுதலைப்போரில் விடுதலைக்கான கருவியாக வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்ட வரலாறு எழுதப்பட்டது.


ஆனையிறவின் வீழ்ச்சியுடன் கடற்புலிகளின் கட்டுப்பாட்டுக் கடற்பரப்பு மேலும் விரிவுபெற்றது. அது அவர்களின் செயற்திறனை மேலும் அதிகரித்தது. இப்போது சிங்களக் கடற்படை பாதுகாப்பானதாகக் கருதிய ஆழ்கடற் பிராந்தியத்தில் கடற்புலிகள் வெற்றிகரமான ஆழ்கடற்சமர்களில் தொடர்ச்சியாக ஈடுபடத் தொடங்கினர்.

கெரில்லாப் பாணியிலான தாக்குதல் அச்சுறுத்தல்களை தவிர்க்கக்கூடியதாக தன் கடற்பயணங்களை எதிரி அமைத்திருந்தான். கரையிலிருந்து தூரவிலகி ஆழ்கடலில் பயணிப்பது, இரவு வேளைகளை விடுத்து பகலிலேயே தன் பயணங்களை தொடங்கிமுடிப்பது, அதிகளவிலான போர்க்கப்பல்களின் பாதுகாப்பில் பயணிப்பது என எதிரியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தன. இத்தகைய விநியோகத் தொடரணிகளும் கடற்புலிகளின் வெற்றிகரமான வியூகங்களுள் சிக்கவேண்டியதாயிற்று. கடற்புலிகளின் கட்டுப்பாட்டுக் கடற்பரப்பில் மட்டுமல்லாது எதிரியின் ஆளுகைக்குள்ளிருந்த பருத்தித்துறை, திருகோணமலை போன்ற கடற்பரப்புகளிலும் கடற்புலிகள் வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

இவ்வாறு கடலில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து பின்னர் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட கெரில்லாத் தாக்குதல்களை கடலில் நிகழ்த்தி ஈற்றில் மரபுப்போர்ப்பண்புகளைக் கொண்ட கடற்போர்களில் ஈடுபடக்கூடிய நிலைவரை தமிழர்களின் கடற்சேனை முதிர்ச்சி பெற்றிருக்கிறது. இவ்வாறு அசாதாரண வீரமும் வியக்கவைக்கும் அர்ப்பணிப்புகளும் நிறைந்த பத்தாண்டு வரலாறு எமது கடற்புலிகளுக்கு உண்டு.

**-அ.பார்த்திபன்-**

எமது விடுதலைப்போரின் தலைவிதியை நிர்ணயித்த இக்கடல் வாழ்வில் 163 கடற்கரும்புலிகளும் 903 கடற்புலிகளுமாக எம் கடற்போராளிகள் தம்முயிர் கொடுத்தார்கள். இத்தனை உயிர்களும் எமது விடுதலைப்போருக்கு வாழ்வு கொடுத்தது. உப்பு நீரையே தமது வாழ்விடமாக்கி அசாத்தியமான அந்தப்பணியை அவர்கள் சாத்தியப்படுத்தினார்கள். அதனால் போர்த்திறன் மிக்க, எதையும் அர்ப்பணிக்கவல்ல, எதிலும் சாதிக்கவல்ல பலம்வாய்ந்த கடற்படையொன்றை தமிழினம் கொண்டிருக்கின்றது. எனினும், அண்மையில் கடற்புலிகளின் களமொன்றில் நடந்த பத்தாம் ஆண்டு நிறைவு விழாவில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல்.சூசை அவர்கள் வெளியிட்ட பிரகடனத்தையே எனது இப்பார்வையின் முடிவுரையாக அமைக்க விரும்புகிறேன்.



"இந்தப் பத்து ஆண்டுகளில் நாம் சாதித்தவை சிறுதுளி. ஆனால் எமது தலைவரின் எண்ணத்தில் இருப்பதோ பெரும்பணி. வீரச்சாவடைந்துவிட்ட எமது 163 கடற்கரும்புலிகள் உட்பட 1066 கடற்புலி மாவீரர்களினதும் வழிநடந்து அந்தப் பெரும்பணியை நாம் நிறைவு செய்வோம்."



www.eelamview.com

www.eelamview.com

அடைமித்துக்கொண்டிருக்கும் எறிகணைச் சத்தங்களும் கிபிர் விமானங்களின் இரைச்சலும்,அவனிற்குத் தொலைவில் கேட்பவையாகவே இருக்கின்றன. இவ்வாறான அனுபவங்கள் பலமுறை ஏற்பட்டிருக்கின்றது. எனினும் இன்னும் அவனால் இவற்றை சாதாரணமானதொன்றாக குருதிப்பெருக்கானது நிறுத்தப்படல் வேண்டும். ஆனால் மேற்படி சத்திர சிகிச்சையை அங்கு செய்ய முடியாது. அதனால் உடனேயே பின்தள மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும். வழியில் உயிர் பிரிவதற்கான சாத்தியங்களே அதிகம் காணப்படுகிறது. மேற்படி விடயங்களை



# களமாடும் மருத்துவம்

ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. எதனை....? "இன்னும் கொஞ்சம் நாங்கள் முன்னேறியிருந்தால் இந்த உயிரிழப்பையும் தவிர்த்திருக்கலாம்." என ஒரு மனமும், "இன்றைய யதார்த்தத்திற்கு இது சாத்தியமில்லை." என இன்னொரு மனமும், கயிறிழுத்தல் நிகழ்வொன்றை ஏற்படுத்திவிட இவன் தடுமாறுகிறான். "டொக்டர் நீங்கள் அனுப்பிய ஆள் வழியில் வீரமரணம்." என வாகனச்சாரதி கூறிய செய்தி எதிர்பார்த்ததாக இருந்தாலும், அதிர்ச்சியையே கொடுக்கிறது.

ஆனையிறவு இராணுவ முகாமை வெற்றி கொள்வதற்கான தொடர் முயற்சிகள் நடைபெறுகின்றன. அப்பிரதேசத்திற்கான பிரதான மருத்துவ நிலையம் கட்டைக் காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. அதன் வன்னித் தளத்துடனான தரைத் தொடர்பானது கண்டாவளை நீரேரியினால் இடைவெட்டப்பட்டுள்ளது. இதனால் அங்கு ஆரம்ப சிகிச்சைகளுடன், சிதைந்த அங்கங்களை அகற்றுதல், குருதிக் கலங்களை திருத்துதல் போன்ற சிகிச்சைகளும் செய்ய வேண்டியிருந்தது. எனினும் அவ்விடம் களமுனைக்குச் சில மைல் தொலைவினுள் இருந்ததாலும், வேறு பல காரணங்களினாலும், எம் மருத்துவ வளர்ச்சியின் உச்ச திறனை வெளிப்படுத்துமிடமாக அதனை மாற்றமுடியவில்லை. இவ்வாறானசூழ்நிலையில் தான் வயிற்றில் காயப்பட்ட போராளி ஒருவன் அங்கு கொண்டுவரப்படுகிறான். அவன் காயப்பட்ட நேரம், குருதியமுக்கம், நாடித்துடிப்பு வீதம் போன்ற இன்னோரன்ன குணங்குறிகளை வைத்து அனுமானிக்கும் போது விரைவான குருதிப் பெருக்கானது வயிற்றறையினுள் ஏற்பட்டுள்ளது எனும் முடிவுக்கு வருவதில் சிரமம் இருக்கவில்லை. அவனைக்காப்பாற்ற வேண்டுமாயின் மீள் உயிர்ப்பித்தல் செய்யப்படுவதுடன் வயிற்றறையானது உரிய முறையில் வெட்டித் திறக்கப்பட்டு கருத்தில் எடுத்தவன், குருதி, திரவ ஊடகம் என்பவற்றை தேவையான அளவு உட்செலுத்தி பின்தளம் அனுப்பும் முயற்சியில் வேகமாக ஈடுபடுகிறான். அப்போது அப்போராளி "டொக்ரர் நான் தப்புவனா? " எனக் கேட்கிறான். இவனோ அவன் தலையைக் கோதியவண்ணம், "ஓம் பிரச்சனையில்லை......" என நம்பகத்தன்மையை முகத்தில் பரவவிட்டவண்ணம் கூறுகிறான். உயிர் இழக்கப் போகின்றவனுக்கு உண்மை கூற முடியாத நிலையும், தெரிந்தே ஒரு இழப்பு ஏற்படுவதை அனுமதிக்க வேண்டிய நிலையும் அவனில் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.

"சே........இந்த வேலை எத்தனை நாளைக்குத் தொடரும்." என ஒரு முறை கூறுகிறான். "இல்லையில்லை பல்வேறுபட்ட போர்ப்பணிகளில் இதுவும் ஒன்றே.... கடமையை மட்டும் செய்வோம்..." தத்துவங்களை சமாதானத்துக்கு இழுக்கிறான். விரைந்து வரும் வாகன இரைச்சல் ஒன்று பணியைத்தொடர அவனை ஆயத்தப் படுத்துகிறது. இரண்டு, மூன்று நாட்களாக தொடரான வேலைப்பளுவும், சீரான நித்திரை, உணவின்மையும் களைப்பை அதிகப்படுத்திவிட அதனை வெளிக்காட்டாமல் இருக்க அதிக பிரயத்தனம் எடுக்க வேண்டியுள்ளது. ஆளணி எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினால் சத்திர சிகிச்சை செய்யும் இவனே மயக்க மருந்து கொடுப்பதை கண்காணித்தவண்ணம் ஏனைய மருத்துவப் போராளிகளையும் ஒருங்கிணைத்து பணியைத் தொடங்குகிறான். எது எவ்வாறு இருந்தபோதும் இயக்கத்தின் இராணுவத்துறைசார் முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவில் கள மருத்துவமும் முன்னேறியுள்ளது ஆறுதலைத்தருகிறது.

1994ம் ஆண்டு எமது மருத்துவ வளம் யாழ் நகரையே தளமாகக் கொண்டிருந்தது. கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலை மேற் கொள்வதற்காக மணலாறு, நெடுங்கேணிப்பகுதிகளில் கூடியிருந்தோம். சமர் நிலைகளில் இருந்து கொண்டுவரப்படும் நூற்றுக்கணக்கான காயக்காரர்களுக்கும் முதலுதவி, சிறு சத்திர சிகிச்சைகள் என்பனவே மேற்கொள்ளப்படும். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் உடனடியாக யாழ் மருத்துவமனைக்கே அனுப்பப்படுவர். இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில்தான் பெண் மருத்துவப்போராளி ஒருவர் பின் முழங்கால் பகுதியில் சிறு காயத்திற்குட்படுகின்றார். அக்காயம் காலிற்கான பிரதான நாடியைத்தாக்கியிருக்குமோ என சந்தேகம் எழுகின்றது. அவ்வாறு இருந்தாலும் அங்கு ஒன்றும் செய்ய முடியாது. அப்போராளி யாழ் மருத்துவமனைக்கு சென்றடைய ஒரு நாள் தாமதமாகியது. விளைவு அப்போராளியின் கால் இழக்கப்படவேண்டியதாயிற்று. அந்நிகழ்வுடன் ஒப்பிடுகையில் இன்று களமுனைக்கு அருகாமையிலேயே மேற்படி சிகிச்சைகளைச் செய்வது பெருமை கொள்ள வைக்கிறது. எனினும் திருப்தி கொள்ள முடியாது...... இன்னும் முன்னோக்கி நகரவேண்டுமென பலவாறு எண்ணியவன் சத்திர சிகிச்சையின் நுணுக்கமான பணியினுள் அமிழ்ந்து போகிறான்.

நிமிடங்கள் மணித்தியாலங்களினுள் மறைய உடைகள் வேர்வையிலும், தெறிக்கும் இரத்தத்திலும் தெப்பமாக நனைகின்றது. இடையிடையே வீசும் சிறு காற்றும் இந்திரபோக இதம் இதுவோ என எண்ணவைக்கிறது. போதிய உபகரணங்கள், வெப்பம் வெளிவிடா ஒளியூட்டல் வசதி என்பன இன்மையால் மாற்று வளங்களைப்பிரயோகிப்பதென்பது இடையிடையே சினத்தையும் கொடுக்கின்றது. எனினும் இடர்பாடுகளுக்குள் முகம்

(14ம் பக்கம் தொடர்ச்சி)

# அந்த கானகத்து நாட்கள்

— கலிங்கன் —

"மூன்று நாட்களாக உணவு உண்ணவில்லை............... அண்டைக்கு கடைசியா குடிச்ச கஞ்சிக்குப்புறவு.........ஏதும் சாப்பிட்டனானா...? சாப்பாடெண்டு சொல்லி ஒண்டும் சாப்பிடல்ல........அப்பப்ப பசி தாங்கொணாமப்போக அந்த நேரத்திக்கு காரயில் மட்டும் சாப்பிட்டதுதான்........மத்தப்படி பனிச்சம் பழம் ஒண்டு ரெண்டு சாப்பிட்டதுதான்..........?

தோளில் கனத்த அரிசி அடப்பையைவிட பசி வயிற்றை பாடாய்ப்படுத்தியது. தூக்கிவரும்போதே உரப்பையில் போட்டிருந்த துவாரத்தின் வழியாக ஓரிரண்டு அரிசிகளை எடுத்து வாயினுள் திணித்தான் ரெட்ணம். "கரண்ணன்...... எங்கையாவது நிப்பாட்டி சாப்பிட ஏதாவது தந்து போட்டுத்தான் வேசிக்குக் கூட்டிப்போவார்......" மீண்டும் மீண்டும் அவன் எண்ணமானது உணவைச்சுற்றியே வலம்வந்து கொண்டிருந்தது. சுமையுடன் நடந்து கொண்டிருந்தான். பாதணிகள் இல்லாத கால்களை அப்போதுதான் முளையிட்டுக்கொண்டிருந்த 'இலுக்கு' முனைகள் பதம்பார்த்துக் கொண்டிருந்தன.

எதிரில் தெரிந்த அடர்ந்து நீண்டுகொண்டே போகும் பெரிய மரங்களின் அணிவகுப்பு அதுவோர் ஆற்றங்கரை என்பதை அடையாளம் காட்டி நின்றது. அந்த இடத்தை அடைந்தவர்கள் அதன் குளிர்மையான மருதமரநிழல் மடியில் சிறிதுநேரம் களைநீங்கினார்கள்.

அப்போது மதன். "டேய் ரெட்ணமண்ணன் எண்ட உப்படப்பைய எடுத்துப்போட்டு உன்ர அரிசி அடப்பையைத்தாவன் நான் தூக்கிவாறன்........"

ரெட்ணத்திடம் கிசுகிசுப்பாய் குரல் கொடுத்தான். பாவம் மதன் சிறியவன். மிக நீண்டதூரம் இவனால் சுமையினைத் தூக்கமுடியாமல்த்தான் இருக்கும். இதைவிட முக்கிய காரணம் இன்னும் ஒன்றும் உள்ளது.

அரிசி சீனி அடப்பையினை எடுத்தவர்கள் தாங்கள் பேறுபெற்றுவிட்டதாய் நினைத்துக் கொண்டுதான் அதைத்தூக்கிச் செல்வார்கள். போகும் வழியெங்கும் பையில் போடப்பட்ட துவாரத்தின் வழியாக வாயில் போட்டுக்கொண்டே போகலாம். இப்போது மதனுக்கு வந்த பிரச்சனை இதுதான். உப்பை அவன் எப்படி துளைவழியாக உண்பான். உப்பையெடுத்த மதனுக்கே இந்தக்கதியென்றால் தேங்காய் அடப்பை எடுத்தவர்களது நிலையை கேட்கவும் வேண்டுமா......?

ரெட்ணம் தன் அரிசி அடப்பையை மதனிடம் கொடுத்துவிட்டு அவனது உப்பு அடப்பையை வாங்கிக்கொண்டே கையில் வைத்திருந்த சிறிதளவு அரிசியை காற்சட்டை பையினுள் போட்டுக்கொள்ள பயணமும் ஆரம்பமானது. "இப்பவே ரெண்டு மூண்டு கொத்து குறைஞ்சித்து உன்னட்டையும் தந்தித்தன் இனியெத்தன கொத்து குறையுதோ தெரியா...." ரெட்ணம் மெதுவாய்ச் சொல்ல மதன் புன்னகைத்துக் கொண்டான் பயணம் தொடங்கியது.

"இனி பேசுக்குப் போய்த்தான் அடப்பயை இறக்கோணும்...." கரண்ணன் சொல்வது தெளிவாய்க் கேட்டது. அந்த அணி நகர்ந்துகொண்டிருந்த ஒற்றையடிப்பாதைக்கு மிகச்சமீபமாக நீர் வற்றி சேறாக நிறைந்து போயிருந்த ஒரு சிறுகுளம் போன்ற பள்ளத்தை அவர்கள் கடந்துபோய்க்கொண்டிருந்தார்கள். "சா....இந்தப்பள்ளம் நாங்க கிடக்கிற இடத்துக்குப் பக்கத்தில இருந்தா.....எப்படி......யிரிக்கும் .........நல்ல ஆம கிடக்கும்.......சொல்லி வேலயில்லையப்பா......" முன்னே சென்றுகொண்டிருந்தவன் ஒருவன் சற்றுப்பலமாகவே ஆதங்கப் பட்டுக்கொள்வது தெள்வாய்க்கேட்டது.

அந்த அணியின் நகர்வானது போகப்போக வேகமுடன் நகர்வதாகவே இவனுக்குப்பட்டது. பசிதாளாது தேன்தூக்கி மரங்களில் சாய்ந்தபடியிருக்கும் போராளிகளின் நினைவு ரெட்ணத்தின் மனதிலும் காட்சியாக நுளைந்தது. அவனது கால்களும் வேகம் பெற்றன.

அந்த அணியின் நீண்ட பயணம் முடிவிற்கு வந்தபோது அவர்கள் பாசறையை அடைந்துவிட்டார்கள். உணவுப்பொதிசுமந்து வந்த அந்த அணியினைக்கண்ட பாசறையில் உள்ளவர்கள் எழுந்து நடமாடத் தொடங்கினார்கள். இன்னும் சிறிது நேரத்தில் நிறையவே சோறுகள் உள்ள ஒரு கஞ்சி கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. ஆவலுடன் வந்து அடப்பைகளைப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். அடப்பையை இறக்கிய ரெட்ணத்திற்கு பசி தாங்கமுடியவில்லை. என்ன செய்யலாம் எனச்சிந்தித்தவாறே ஒருவித ஈர்ப்பால் சில நாட்களுக்குமுன் சமையல் செய்த அந்த இடத்தை நோக்கி நடந்தான்.

அவர்கள் தங்கியிருந்த அந்தப்பகுதி சிறு சிறு மலைக்கல்கள் நிறைந்துபோன இடம். அங்கே ஓரிடத்தில் இரண்டு நாட்களுக்கு முன் உணவு சமைத்தபோது சிந்தப்பட்ட சிறிதளவு சோறு மலைக்கல்லின்மேல் கிடந்தது. குளிர்மையான ஈரலிப்பான இடமாதலால் அது ஓரளவிற்கு அப்படியே கிடந்தது.

"நல்லகாலம் ஒண்டும் காணல்ல...." தனக்குள் எண்ணிக்கொண்டவன் அதை அப்படியே இருகரத்தாலும் ஒன்றாக்கினான். சற்றுப்பசியாற அது போதுமானதாய் இருந்தது.

தான் தங்கியிருந்த மரத்தடிக்கு வந்து மீதி வயிற்றின் இடைவெளியை நீரினால் நிரப்பிக்கொண்டான். மெதுவாக அங்கேயே அமர்ந்து தேன்தூக்கி மரத்தில் அவனும் சாய்ந்துகொண்டான். பார்வையைச் சுழலவிட்டான். தொலைவில் அடுப்பு எரிந்துகொண்டிருந்தது. பாரிய பானையொன்று அதன் கழுத்தளவு நீரைத்தாங்கி அடுப்பில் ஏற்றப்படுவதும் தெரிந்தது. பக்கத்தில் குவிந்துகிடந்த அரிசி அடப்பையையும், நம்பிக்கையோடு நடமாடிய போராளிகளையும் மாறிமாறிப் பார்த்தான். அவன் மனதிலும் நம்பிக்கை பிறந்தது.

◆



www.eelamview.com

www.eelamview.com



# போரும் தீர்வும்

கலாநிதி.க.சோமஸ்கந்தன்

சிறிலங்கா பற்றிய ஆய்வு நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அதன் பரப்பளவிலும் கூடிய விகிதத்தில் வெளிவருகின்றன. உலகின் பல இராணுவ மற்றும் இராசதந்திரக் கல்வி நிலையங்களில் அவை பயன்பாட்டில் உள்ளன. இந்தியாவில் மாத்திரம் சென்னை, புதுடில்லி, ஜெயப்பூர், சந்திகார், கொல்கொத்தா போன்ற பிரபலமான பல்கலைக்கழகங்களின் அரசறிவியற் பிரிவுகளில் சிறிலங்கா பற்றிய கற்கைகள் முக்கியம் வகிக்கின்றன. இந்திய வெளிவிவகார அமைச்சகம் நிறுவிய ஜவகர்லால்நேரு பல்கலைக் கழகத்தில் முதலாவது தலைவராக சிறிலங்காவுடன் நெருங்கிய தொடர்புடைய காலஞ்சென்ற இராசதந்திரி ஜீ.பார்த்தசாரதி நியமிக்கப்பட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியக் கல்விக்கான பிரிவில் சிறிலங்கா பற்றிய ஆய்வுகள் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டின் சிறந்த கல்விமான்களும், 'றோ' புலனாய்வு அமைப்பின் அறிவு ஜீவிகளும் இதில் பங்கேற்கின்றனர். சிறிலங்கா அவதானிப்பும், பகுப்பாய்வும் இவர்கள் முதற்பணியாகும். சென்ற வருடம் சிறிலங்கா பற்றிய எட்டாவது அனைத்துலக மாநாடு ஜெயப் பூரில் இடம் பெற்றது. சிறிலங்காவைத் தமது ஆய்வுப் பொருளாகக் கொண்ட ஐம்பது வரையிலான இந்திய வெளி விவகார அமைச்சக அதிகாரிகளும், அரசறிவியல் நிபுணர் களும் இராசதந்திரிகளும், இராணுவ வல்லுநர்களும் தமது ஆய்வு முடிவுகளை வெளியிட்டனர்.



அமெரிக்க இராசதந்திர அதிகாரிகளின் பயிற்சிக் கல்லூரியான ஜோர்ஜ்ரவுண் வாஷிங்ரனில் இயங்குகின்றது. ஒவ்வொரு வருடமும் கோடைகாலத்தில் அது விரிவான அரசறிவியல் மாநாட்டை நடத்துகின்றது. உலக நாடுகளின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள், நீதி நிர்வாக மற்றும் நிதித்துறை மேலாளர்கள், பத்திரிகையாளர்கள், இராணுவ மற்றும் இராசதந்திர அதிகாரிகள் மாநாட்டிற்கு அழைக்கப்படுகின்றனர். கடந்த சில வருடங்களாக சிறிலங்கா விவகாரங்களும் இங்கு முக்கியமாக அலசப்படுகின்றன. (ஒக்ரோபர் 08.1997இல் அமெரிக்கா புலிகளைத் தடைசெய்தபோது இராஜாங்க செயலராகப் பதவிவகித்த ''மடிலைன் அல்பிறைற்'' இக் கல்லூரியின் அரசறிவியற் பிரிவில் பேராசிரியராக இருந்தவர். வருடாந்த மாநாடு நடத்தும் முறைமையை உருவாக்கியவர் இன்னுமோர் முன்னாள் இராஜாங்க செயலரான ஹென்றி கிசிங்கராவார்.)

ஆனால், இவ்வருட (2002) ஜூலை மாத நடுப்பகுதியில் ''டொயிற்சவெல்ல'' எனப்படும் ஜேர்மன் தேசிய வானொலிக்கு வழங்கிய செவ்வியில் சிறிலங்காவின் இன்றைய வெளிவிவகார அமைச்சர் திரோன் பெர்நாந்தோ ஒருவகை ஏளனக் குரலில் இப்படிக் கூறினார். ''நான் ஜெயவர்த்தனா அரசில் துணை வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் சில வெளிநாடுகள் தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரிக்கத் தயாராக இருந்தன. கடும் முயற்சிமூலம் நாம் அதை முறியடித்தோம்.'' என்றார். ஆனாலோ, சிறிலங்கா விவகாரம் சர்வதேசமயமாக்கப்பட்டுவிட்டதையும், உலக விவகாரங்களில் அது முன்னணி இடம்பிடித்துள்ளதையும் இவ் வானொலிச் செவ்வி மூலமாகவே அறிய முடியும்.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சகம் நடைமுறைப்படுத்தும் அனைத்துலக மட்ட இராசதந்திரம் மூன்று பிரதான இலக்குகளைக் கொண்டது.

01) ஈழத்தமிழர்களின் நியாயப்பாடுகளை மறுதலிப்பது. தனிநாட்டுக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்வது.

02) ஈழத்தமிழர்களுக்கு எதிராக அது நடத்தும் ஆயுதப் போருக்குத் தேவையான நிதியுதவி, ஆயுத தளபாடக் கொள்வனவு, பிரசார அனுகூலங்கள் போன்றவற்றைப் பெறுவது.

03)மேற்கூறிய இரண்டிற்குமாக பலதரப்பட்ட உலக நாடுகளுடன் நட்புறவைப் பேணுவது.

கடந்த சில தசாப்தங்களாக சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கை இவற்றைத் தழுவிச் செல்கின்றது. சிறிலங்கா தனது தேசிய நலனாகப் போரை வரித்துள்ளது. போரைக் கைவிட இயலாத நிலையில் அது தவிக்கின்றது. சிறிலங்கா இராசதந்திரத்தையும் அது பூண்டுள்ள வெளிநாடுகளுடனான நெருக்க உறவுகளையும் போர் தீர்மானிக்கின்றது. சிறிலங்காவின் ஆயுதப்படைப்பல வளர்ச்சிக்கு போர் உந்து சக்தியாக அமைகின்றது.

1958இல் தமிழர்களுக்கு எதிரான முதலாவது திட்டமிட்ட கலவரங்கள் தொடங்கின. சிறிலங்கா இராணுவம் யாதொரு பாரபட்சமும் காட்டாது அதை அடக்கியது. அதன்பின் சிறிலங்கா இராணுவம் சிங்கள இராணுவமாக மாறியதோடு தமிழர்கள் மீது தாக்கும் பொறுப்பைத் தனதாக்கியது. இந்த வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய இன்னுமோர் நிகழ்ச்சி பாராளுமன்றத்தில் நடந்தேறியது. 1956இன் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்தில் காயமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் காயங்களுக்குச் சுற்றிக் கட்டப்பட்ட துணியுடன் பாராளுமன்றம் வந்தபோது பிரதமர் பண்டா ''போரின் மதிப்பான காயங்கள்'' என்று ஆங்கிலத்தில் (THE HONOURABLE WOUNDS OF WAR) நையாண்டி செய்தார்.

அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக விவாத அரங்குகளில் மிடுக்காகப் பேசுவதிலும், குத்தல் நையாண்டி போன்ற சொல்லாயுதங்களை இலாவகமாகப் பயன்படுத்துவதிலும் ஒப்பற்று விளங்கியவர். ஆனால், அன்று அவர் நாக்கில் சனி போலும் அவர் ஆங்கிலத்தில் சொன்ன அந்த வசனம் பிற்காலத்தில் சிறிலங்காவின் தலைமைப் பதவியில் இருந்த ஜெயவர்த்தனா கூறிய ''போர் என்றால் போர்'' என்ற சவால் வசனத்திற்கு முன்னோடியாக அமைந்தது. இவற்றை ஆய்வாளர்கள் பதிவு செய்து படிக்கின்றனர்.

தமிழர்களைத் தாக்குவதையே பண்டாரநாயக்கா குடும்பம் தனது தொழிலாகக் கொண்டுள்ளது. தகப்பன் வட-கிழக்கு மீது 1958இல் தனது படைகளை ஏவினார். தாயும் மகளும் முறையே 1961,1994 காலப்பகுதிகளில் அதையே செய்தனர். 1958 ஜூன் 03ஆம் நாள் நடந்த ஆளும் கட்சி உறுப்பினர் சந்திப்பின் போது பிரதமர் பண்டா, ''எனது இராணுவ அணிகள் இப்போது வடக்கிலும் கிழக்கிலும் நிற்கின்றன. இரு மாகாணங்களிலும் இரு இராணுவ ஆளுநர்கள் தலைமையில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது. நான் மீண்டும் சொல்கிறேன் அவர்கள் இராணுவ ஆளுநர்கள். என்னுடைய இராணுவத்தின் உதவியுடன் இந்த மாகாணங்களில் ஒரு வித்தியாசமான நிர்வாகத்தை ஏற்படுத்தும் இன்னுமோர் முயற்சியை நான் தடுப்பேன்.'' என்று உரத்துக் கூறினார். வரலாறு மீண்டும் வரும் என்பார்கள். சிறிலங்காவில் அது எத்தனை தடவை வந்துவிட்டது.

எக்கட்சி பதவிக்கு வந்தாலும் தமிழர்களுக்கு எதிரான 'இனக்கலவரம்' மாத்திரம் நிச்சயம் என்றதொரு நிலை இருந்தது. 1956,1958,1974,1979,1981,1983 இப்படியாகத் தமிழர்களுக்குச் சொத்தழிவும், உயிரழிவுகளும் ஏற்படுத்தும் தொடர் நிகழ்ச்சிகள் நடந்தேறின. இனக்கலவரங்கள் தற்செயலாக நடப்பதில்லை என்பது ஆய்வாளர் முடிவு. அடிப்படையில் திட்டம், ஒழுங்கமைப்பு, உத்தரவு என்ற மூன்று கட்டங்கள் சிறிலங்கா கலவரங்களில் அடையாளம் காணப்படுகின்றன. 1983இல் நடைபெற்றது போகிரம் (POGROM) என்று வகைப்படுத்தப்படுகின்றது. மிகப் பரந்தளவு படுகொலை நிகழ்ச்சி என்பதே இந்த ருஷ்ய மொழிச் சொல்லுக்கான அர்த்தம்.

1983 'கலவரங்களின்' தந்தையான ஜெயவர்த்தனா இனப் போரை உச்சக்கட்டத்திற்கு இட்டுச் சென்றார். இஸ்ரேயில் நாட்டு 'மொசாட்' படையினரையும், இங்கிலாந்தின் 'கீன் மீனி' கூலிப் படையையும் இறக்குமதி செய்தார். போர் விமானங்களைக் கொள்வனவு செய்து அப்பாவித் தமிழர்கள் மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தும் வெறித்தனமான நடைமுறைக்கு வித்திட்டார். தமிழர்களை நசுக்குவதற்கு ''எந்தப் பிசாசின் உதவியை நாடுவதற்கும் நான் தயாராகவுள்ளேன்'' என்றார். தனது மகன் ரவி ஜெயவர்த்தனாவின் தலைமையில் விசேட அதிரடிப்படை என்ற கொலைக்காரக் கும்பலை உருவாக்கித் தமிழர்களை வகை தொகையாகக் கொன்று குவித்தார். அண்மைக் காலம்வரை மறைவாக இருந்த ரவி இன்றைய அரசினால் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டதை சந்தேகத்துடன் பார்க்க வேண்டியிருக்குமா?

மனிதன் புலியைக் கொன்றால் அது வீர விளையாட்டு, புலி மனிதனைக் கொன்றால் அது அதிபயங்கரம் என்றார் நாடகாசிரியர் ஜோர்ஜ் பேர்நாட்ஷா. எமது மக்களை அரச பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாப்பதற்காக நாம் ஆயுதம் ஏந்தினோம். எமது உரிமைகளை நிலை நாட்டுவதற்காக, தமிழர் தாயகத்தை மீட்பதற்காக நாம் அனுமதிக்கப்பட்ட போர் உத்திகளைப் பயன்படுத்துகிறோம். தனது பயங்கரவாதச் செயல்களை மறைத்தபடி ஜெயவர்த்தனா அரசு மிகவும் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இயற்றித் தமிழர்களைத் துன்புறுத்த முனைந்தது. இதற்கு எதிரான கண்டனக்குரலை எழுப்ப உலக சமுதாயம் தவறியது.

1984இல் அதிபர் றேகனின் அழைப்புடன் ஜெயவர்த்தனா வெள்ளை மாளிகை சென்றார். இவ்வாறு வெள்ளை மாளிகை புகுந்த முதலாவது சிறிலங்காத்தலைவர் இவர்தான். அமெரிக்காவிடம் பல உதவிகளை அவர் எதிர்பார்த்தார். பனிப்போர் சூழலில் அது கிடைக்கவில்லை. மாறாக இந்தியாவின் உதவியை நாடும்படி அவருக்கு ஆலோசனை தரப்பட்டது. ஒரு முட்டாள் மாத்திரம் தன்னுடைய சண்டையைத்தானே பிடிப்பான் என்று மக்கியாவெல்லி கூறிச்சென்றார். அதன் அடிப்படையில் அமைதிப் படையென்ற போர்வையில் தமிழர்களுக்கு எதிரான போரில் சிறிலங்காவின் துணையாக இந்தியப்படைகள் உள்வர நேர்ந்தது. இந்தியர்கள் 1990இல் வெளியேறியபின் சிறிது காலம் அமைதிப் பேச்சுக்கள் நடந்தன. ஆனால், மீண்டும் போர் தொடங்கிவிட்டது.

ஜூன் 20.2002 வெளியீட்டு விழாக்கண்ட தனது வாழ்க்கை நூல் மூலம் முன்னாள் கொழும்பு மேயர் சிறிசேனகுரே தனது நண்பர் ஜனாதிபதி பிரேமதாச பற்றிய முக்கிய தகவலை வெளியிடுகின்றார் – PREMADASA AND I: OUR STROY. பேச்சுக்களை புலிகளோடு நடத்திய வாறு தமிழ் மக்களை அரசுபக்கம் இழுக்கும் உத்தி மூலம் புலிகளைத் தனிமைப்படுத்த முடியுமென பிரேமதாச நம்பினார். தனிமைப் படுத்தப்பட்ட புலிகளை இராணுவ ரீதியாக அழிப்பது எளிதென்று அதே பிரேமதாச நம்பினார். சிறிசேன குரேயின் கூற்றைத் திருத்தம் செய்யும் தகவல் சிங்கப்பூர் தலைவர் லீ குவான் வெளியிட்ட வாழ்க்கைநூலில் காணப்படுகின்றது. ''வேண்டாமப்பா, சண்டை வேண்டாமப்பா. பேச்சு மூலம் சமாதனம் காண்பாயாக'' என்று தான் கூறியதாகவும் அதற்கு சிங்கப்பூர் வந்திருந்த பிரேமதாச ''வெல்வது சுலபம்'' என்று சொன்னதாகவும் இந்த நூல் கூறுகின்றது. ஒரு தீர்வின் தடுமாற்றங்கள் என்ற தலைப்பில் முன்னாள் சிறிலங்கா புலனாய்வுத்துறை செயலாளர் நாயகம் மெரில் குணரத்தினா எழுதிய நூலில் (THE DILEMMA OF AN ISLAND BY MERIL GUNARATNE) வெளியீட்டு விழாவில் பின்வரும் சுவையான தகவல் வெளிவந்தது. தமிழர் மண்ணில் கால்பதித்த ஐ.பி.கே.எவ் படையினர் புலிகள் மீது தாக்குதல் தொடுக்காமல் காலம் தாழ்த்துவதை ஜெயவர்த்தனா விரும்பவில்லை. போரைத் தொடங்கும்படி இந்தியாவை நிர்ப்பந்திப்பதற்காக மெரில் குணரத்தினாவை புதுடில்லி அனுப்பினார். குணரத்தினாவும் 'றோ' அமைப்பின் தலைவர் ஜீ.சி.சக்சேனாவும் ஒன்றாகப்பேசி போரிடும் முடிவை எடுத்தனர். இதன் பின்பே புலிகளுக்கு எதிரான ஒப்பரேசன் 'பவான்' என்ற இராணுவ


(தொடர்ச்சி -14ஆம் பக்கம்)



www.eelamview.com

www.eelamview.com





# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

# அலையில் கரையும் ஆத்மாவின் தவிப்பு

–ச.புரட்சிமாறன்–

"களத்திலே நிதி வீழ்ந்துவிட்டானாம்." என்ற செய்தி வீட்டு வாயில்வரை வந்து சேர்ந்தது. அவனின் வித்துடல்கூடக் கிடைக்கவில்லை. எல்லோரும் அழுது புலம்பினார்கள். அவனின் இழப்பை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவனுக்காக எட்டுச்செலவும் முடிந்தது. இப்போது 31ம் நாள் நினைவுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ''நிதி வீரச்சாவில்லையாம், நிதி வீரச்சாவில்லையாம்." காற்றோடு கலந்து வந்தது அந்த இனிய செய்தி. சாவீடு அங்கே சந்தோசத்தில் துள்ளிக்கூத்தாடியது.

இரும்பொறையாய் கடற்புலிகளுக்காய் வரலாறு படைத்தவன் 1991இல் ஆனையிறவு ஆகாய கடல் வெளிச்சமரில் மடிந்துவிட்டதாக வந்த செய்தி பொய்யாகிப்போனது. கடல் எப்போதுமே அமைதியாக இருப்பதில்லை. அலைகள் எப்போதுமே எதையோ அடைவதற்காய் துடித்துக்கொண்டேயிருக்கும். அந்த அலைகளைப் போலவே கடலுக்குள் வாழ்ந்தவனின் கதையிது.

இரும்பொறை என்ற பெயரையும் அந்தப் பெயரின் இதயத்தையும் அறியாத யாரும் கடற்புலிகளில் இருந்திருக்க முடியாது. அதுபோலவே இந்தத் தேசத்தில் அந்த வீரனைப்பற்றி அறியாதவர்கள் இருக்கவும் கூடாது. ஏனென்றால் தேசம் மடியக்கூடாதென்பதற்காக சாவையே மறந்து, சாதனைகளையே எதிர்பார்த்து வாழ்ந்த வரலாறுகள் மறைந்து விடக்கூடாது.

எல்லோரும் அறிந்தது தமிழீழ விடுதலைப் புலிகளென்னும் தமிழர்தேசியப் படையின் கடற்படைத் துணைத்தளபதி என்ற இரும்பொறையைத்தான்.ஆனால் அதற்கு முன்பே நிதி என்ற பெயரில் அவனுக்கொரு வரலாறு இருக்கின்றது.

1990ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்த ஆரம்ப நாட்களொன்றில் இரும்பொறையின் தாயூரான திருகோணமலை மணியரசன் குளத்தில் பதுங்கித்தாக்குதல் ஒன்றிற்காகப் பதுங்கியிருந்த புலிகளுக்குள் இந்த முகமும் இருக்கிறது. இடுப்பிலே கைக்குண்டுடன் அல்ல, L.M.G என அழைக்கப்படும் கனரக சூட்டு ஆயுதத்தோடு தனது கன்னிச்சமருக்காகக் காத்திருக்கிறான். சண்டை தொடங்குகிறது. L.M.G முழங்குகிறது. இராணுவ உடல்கள் வீழ்கின்றன. ஒரு நீண்ட அனுபவம் மிக்க கனரக ஆயுத வல்லுனனைப்போல் அந்தத் தாக்குதலில் L.M.G யால் எதிர்க்குத் தலையிடி கொடுத்தவனுக்கு பின்னர் G.P.M.G என்னும் கனரகச் சூட்டு ஆயுதமே நிரந்தர ஆயுதமாகியது.

இப்போதுபோல கனரக ஆயுதங்கள் ஏராளம் இருந்த காலப்பகுதியல்ல அது. குறைந்தளவு ஆயுதங்களுடன் கூடுதலான முன்முயல்வுகள். அதனால் திருகோணமலையில் எங்கு சண்டை நடந்தாலும் அங்கு நிதியின் G.P.M.Gயும் இருக்கும். அதுபோல திருகோணமலைப்படையணி எந்த மாவட்டத்திற்கு சண்டைக்குச் சென்றாலும் அங்கும் நிதியின் துப்பாக்கியின் அதிர்வொலி கேட்கும்.


1993 ஆம் ஆண்டு பூநகரி இராணுவத்தளம் மீது மேற்கொள்ளப் பட்ட தவளை நடவடிக்கையிலும் தனது படையணியுடன் களமிறங்கியவன் வெற்றிகரமாய் முடிந்த அந்தச் சண்டைக்குப்பின் ஒரு கனரக சூட்டாளனாக விடுதலைப்புலிகளின் கடற்படைக்கு அறிமுகமாகிறான்.

வல்லரசு நாடுகளிடம் பெற்றுக்குவிக்கும் கடற்கலங்களுக்கு நிகராக கடற்புலிகளின் பலமும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக கடற்புலிகள் தயாரானபோது கடற்புலிகள் நோக்கிய இரும்பொறையின் வரவும் இருந்தது. இங்கேயும் அவனுக்கு கனரக ஆயுதப்பணியே கிடைக்கின்றது. இரும்பொறைக்கும் கனரக ஆயுதத்திற்குமான வாழ்வு இரத்தமும் சதையும் போன்றது. கனரக ஆயுதங்களை அவன் அணுவணுவாகத் தெரிந்து வைத்திருந்தான். அதனால் தான் கடற்புலிகளின் கனரக ஆயுதப்பயிற்சிக் கல்லூரி அவன் வழிநடத்தலுக்குள் கொடுக்கப்பட்டது. அதன்பின் இரும்பொறை மாஸ்ரர், இரும்பொறை மாஸ்ரர் என போராளிகள் அவனுடனேயே இருந்தார்கள்.

ஒரு தாய் தன் பிள்ளையை வளர்ப்பதுபோல அந்தப்பயிற்சி ஆசிரியன் செயற்பட்டான். தன்னிடம் பயிற்சிபெறும் ஒவ்வொரு போராளியும் கனரக ஆயுதக்கையாளுகையில் வல்லவராக வரவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டான். தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் தமிழர் தேசியப்படையின் கடற்படைப் பெண் போராளிகள் இன்று ஆண்களுக்குச் சமனாக நின்று ஓங்கி வீசும் அலைகளை எதிர்த்துத் தங்கள் கனரகச் சூட்டு ஆயுதத்தால் எதிரியின் கலங்களை நோக்கிச் சுடும்போது அங்கு புறப்படும் ஒவ்வொரு சன்னமும் அவன்பற்றி அறிந்திருக்கும். ஏனெனில் தங்களாலும் கனரக ஆயுதங்களைக் கையாள முடியுமா என பெண் போராளிகள் சற்றுத் தயங்கிய வேளைகளில் பக்குவமாக அந்த ஆயுதங்களின் நுட்பங்களை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து, அவர்களின் கரங்களும் கடல் நடுவே நிற்கும் படகில் உள்ள கனரக ஆயுதத்தின் விசைவில்லைத் துணிவாக அழுத்தி எதிரியின் கலங்களில் அவற்றின் சன்னங்கள் முட்டி வெடிக்க வைக்க முடியும் என்ற உணர்வையும் அறிவையும் ஊட்டியவன் அவனல்லவா?.

பயிற்சிகளை வழங்குவதில் அவன் எப்படி மும்முரமாய் ஈடுபட்டானோ அதேபோலவே கடலிலும் சாதனை படைக்கவேண்டும் என்ற உணர்வு அவனுக்குள் எப்போதும் இருந்தது. அந்த உணர்வுக்குச் சந்தர்ப்பமும் கிடைத்தது. அது விடுதலைப்புலிகளின் வரலாறு மீண்டும் புதிதாய்ப் பிறப்பெடுத்த பெருஞ்சமர். ஓயாத அலைகள் ஒன்று. கடந்த காலப்படிப் பிணைகளுடன் புலிகள் புதிதாய் மூட்டிய பெரும் போரில் எதிரியின் கற்பனைகளைச் சிதறடித்து அசாத்தியமான துணிச்சலுடன் எதிரியின் கடற் கலங்களுக்குச் சமனாக வலம் வந்தன கடற்புலிப் படகுகள்.

**கடற்புலிகளின் துணைத்தளபதி**
**லெப்.கேணல் இரும்பொறை**



**சிவராஜா கலைச்செல்வன்**

**தம்பலகாமம், திருமலை.**

**பிறப்பு : 02 – 09 – 1972**

**வீரச்சாவு : 16 – 09 – 2001**

கடலை மட்டுமே துணையாய் நம்பி நின்ற எதிரி தரையிலும் கடலிலும் மூண்ட பெருஞ்சமரில் அதிசயித்து அதிர்ச்சிக்குள்ளாகினான். அதிர்வின் மீட்சிகள் எதிரிக்குக் கிடைக்குமுன் கடலையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர் கடற்புலிகள். கடற்களத்தில் சமரிட்ட கடற்புலிகளின் படகொன்றின் வழிநடத்துனனாக நின்று சமரிட்டான் இரும்பொறை.

கடற்புலிகள் தோற்காத அந்தச் சண்டையின் ஒரு கட்டத்தில் சிறிலங்கா வான்படையின் விமானம் வீசிய குண்டில் இரும்பொறையின் படகு தீப்பற்றி எரிகிறது. இரும்பொறை படகுக்குள் வீழ்கிறான். படகினுள் கடல்நீர் உட்புகுந்து இரும்பொறையின் உடல் சிந்திய இரத்தத்துடன் சேர்ந்து செந்நிறமாகியது. ஆனாலும் அவன் உயிர் அவனது எதிர்காலப் பணிக்காய் இன்னும் இழக்கப்படாமலிருந்தது. அவனது இடதுகால் இடுப்புடன் உடைந்துபோக அவன் மருத்துவ மனைக்குள் முடங்க வேண்டி வந்தது. தன் கால் பொருந்தி மீண்டும் நடமாடக்கூடியவாறு வருவதற்கு ஒரு வருடத்தையும் கடந்து அவன் காத்திருந்தான்.

இந்த வேதனையைக் கடந்து மீண்டும் இரும்பொறை இயங்கத் தொடங்கினான். ஒரு கனரக ஆயுதப்பயிற்சி ஆசிரியன் என்ற நிலையிலிருந்து அவன் மேலும் வளர்ச்சி கண்டு கடற்புலிகளின் சாள்ஸ் படையணியை வழிநடத்தும் பொறுப்பு அவனுக்கு வழங்கப்பட்டது. எப்போதுமே போராளிகளை நன்றாக வளர்க்க வேண்டும் என்ற அவனின் எண்ணத்திற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவன் ஒரு பொறுப்பாளனாக இல்லாமல் ஒரு போராளியைப் போலவேயிருந்து தனது படையை வழிநடத்தினான். தேவையான இடங்களில் கண்டிப்புகள் அதற்கேற்ற வகையில் விட்டுக்கொடுப்புகள் என ஒரு வழிநடத்துனனுக்குரிய எல்லா இயல்புமே அவனிடமிருந்தது. எப்போதும் எதையுமே நேரில் நின்று பார்த்துச் சீர்திருத்தி விடவேண்டும் என்பது அவனது எண்ணம். அது தளத்தில் மட்டுமல்ல களத்திலும் தான்.

ஒரு முறை விநியோகப்பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிப்படகுகள் சிங்களக் கடற்படையின் படகுகளால் வழிமறிக்கப் படுகின்றன. கடற்சமர் மூழுகின்றது. கடற்புலிகளின் சண்டைப்படகுகள் சமரிடத் தொடங்கின. கடற்புலிப் படகொன்றிலிருந்த கனரக ஆயுதமொன்று அப்போது இயங்க மறுத்துக் கொண்டிருந்தது. கரையிலிருந்து கட்டளைகளைக் கிரகித்துக்கொண்டிருந்த இரும்பொறை நிலமையைப் புரிந்து கடற்புலிப் படகொன்றில் கடற்சமர்க் களத்திற்கு விரைகிறான். சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தச் சூழலுக்குள் கூவிச்செல்லும் சன்னங்களுக்கும், வெடித்துச் சிதறும் "கனொன்" ரவைகளுக்கும் இடையில் கடலில் நிதானமாக நின்றபடி, ஆயுதத்தைச் சரிசெய்துகொண்டிருந்தான் இரும்பொறை.

இப்படித்தான் எந்தச் சூழலுக்கும் முகம் கொடுக்கும் அவன் 7-10-99இல் கடலில் நடந்த சமரில் கடற்புலிகளின் துணைத் தளபதி லெப் கேணல் நிரோஜன் வீரச்சாவடைந்ததால் அந்தப் பணியை கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் பணிப்புடன் ஏற்றுக்கொண்டான். கனரக ஆயுதங்களில் அவனுக்கிருந்த பட்டறிவும், கனரக ஆயுதங்களைக் கொண்டு எந்தச் சூழ்நிலையிலும் எதிரியை அழிக்கலாம் என்பதில் அவன் வைத்திருந்த தன்னம்பிக்கை, இருப்பதை வைத்து எதையும் சாதிக்கும் திறன், இடைவிடா முயற்சி என விரிந்து செல்லும் அவனின் ஆற்றல்கள், எங்கள் தேசத்தின் தலைமையும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதியும் அவனைக் கடற்புலிகளின் துணைத் தளபதியாக்க காரணமாக அமைந்தன.

அவனின் சிறப்பியல்புகளையெல்லாம் ஒன்றுசேர வெளிப்படுத்தியது திருமலைத்துறை மீதான தாக்குதல். திருகோணமலைத் துறைமுகம் ஒரு வேவுப்புலிவீரனால் வேவுபார்க்கப்பட்டு கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் கைகளுக்கு வர, அந்தத் தகவல்களோடு நேரடியாக வேவிற்கு இறங்கினான் இரும்பொறை. திருகோணமலைத் துறைமுகமே அதிரவேண்டும் என்ற உணர்வோடு பகலையும் இரவையும் ஒன்றாக்கி உழைத்தான். தாக்குதலின் ஒவ்வொரு ஆயத்தங்களிலும் தானே நேரில் நின்று சரிபார்த்தான். கரும்புலிப் படகுகளையும் தாக்குதல் படகுகளையும் ஓட்டிச் சரிசெய்தான். ஒவ்வொரு போராளிக்கும் சண்டைபற்றித் தெளிவூட்டினான்.

திருகோணமலைத் துறைமுகம் நோக்கி கடற்புலிகளின் கடற்சமர்ப் படகுகளும் கரும்புலிப்படகுகளும் நகர சமநேரத்தில் கரையில் விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படையின் எறிகுழல்கள் தயாராகிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து கடற்படையின் குகைக்குள் மூட்டப்போகும் பெருஞ்சமரை வழிநடத்த களத்திலிருந்தான் இரும்பொறை.

சண்டைக்கான நேரம் நெருங்க எதிரியின் துறைமுகக் கோட்டைக்குள் தன் நுட்பமான திட்டமிடலின்படி படகுகளை முன் நகர்த்தினான். ஒரு சாதகமற்ற சூழலுக்குள் சாதனைச் சிகரத்தைத் தொட்டுவிட எல்லோரும் மௌனமாய்க் காத்திருந்தார்கள். துறைமுகத்திலிருந்த ஆக்கிரமிப்புப் படைகளும் துருப்புக்காவிக் கலங்களும் அதன் துணைக் கடற் கலங்களும் ஆழ்ந்த உறக்கத்திலிருக்க இரும்பொறையின் தொலைத் தொடர்புக் கருவியிலிருந்து கட்டளைகள் பிறக்கின்றன. கடல் அலையின் ஓசை அதிர்வை மேவியபடி கடற்புலிகளின் மூர்க்கமான தாக்குதல் கடலிலும், தரையிலும் ஆரம்பித்தது. விடுதலைப்புலிகளின் பீரங்கிப்படையணியின் எறிகணைக் குழல்கள் துப்பிய குண்டுகள் துறைமுகமெங்கும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. திருகோணமலைத் துறைமுகத்தையும் சிங்களக் கடற்படையையும் சிங்கள அரசையும் →





www.eelamview.com

www.eelamview.com



கலங்கவைத்த அந்த வெற்றிகரத் தாக்குதலை தனித்து நின்று வழிநடத்தினான் இரும்பொறை. எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் எதையும் சாதிக்கும் தன் திறமையை தன் போராளிகளுடன் சேர்ந்து நிரூபித்துக் காட்டினான்.

இப்படித்தான் செயலால் வளர்ந்து சாதனை படைத்தாலும் கடற்புலிகளின் பாதுகாப்போடு பயணித்த விடுதலைப் போராளிகள் சிறிலங்காக் கடற்படையின் தாக்குதலுக்குள்ளாகி மடிந்ததை இரும்பொறையால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த இழப்பு அவனின் நெஞ்சத்தைக் குடைந்துகொண்டிருந்தது. சிறிலங்காக் கடற்படைமீது கடும் சினத்தையும் ஏற்படுத்தியது. வெறும் வேதனைகள் மட்டுமே தன் இதயத்தை அமைதியாக்கிவிடாதென்பதை உணர்ந்தவன் செயலில் இறங்கினான்.

திருகோணமலையிலிருந்து கடற்புலிகளை வழிநடத்திய அந்த இளம் தளபதி மீண்டும் வன்னிக்குத் திரும்பினான்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் ஆலோசனையோடு சிறிலங்கா கடற்படைக்கு தக்க பதிலடிகொடுக்கப் புதிய திட்டமொன்று தீட்டப்பட்டது. கடலில் நேரடியாக நின்று கனரக ஆயுதங்களால் சூட்டுப்பயிற்சி வழங்கி படகுகளை சரிபார்த்து எதிரிக்குப் பேரிடிகொடுக்க கடற்புலிச் சேனையின் துணைத் தளபதியுடன் போராளிகள் தயாராகினார்கள்.


ஒரு இராப்பொழுதில் இயற்கையும் மனிதர்களும் மௌனமாய் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் மெல்லியதாய் இரைந்து கொண்டிருந்த அலைகளுக்குள் படகுகள் இறக்கப்படுகின்றன. இருளின் வெளிச்சத்துக்குள் வானவிளிம்போடு பார்க்கும்போது கறுத்த உருவமாய் படகுகள் அசைந்தன.

இரும்பொறை தன் கட்டளைப் படகுக்குள் இறங்குகிறான். படகுகளின் இயந்திரங்கள் உரத்து ஒலிக்கின்றன. தரையில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி தன் தோழர்களை வழியனுப்பிவிட்டுத் தன் கட்டளையகத்தில் காத்திருக்க. கடற் தகவல். தலைவன் எப்போதும் மக்களுக்குச் சேதம் வரக்கூடாதெனச் சொல்லியது அவர் முன் சிந்தனைக் கணைகளாக வந்து மோதின. நேரம் கடந்துகொண்டிருந்தது. சிங்களக் கடற்படை தங்கள் உயிர்களைக் கையில் பிடித்தபடியிருக்க, இரும்பொறை கரும்புலிப் படகுகளைத் தடுத்தபடியிருக்க, கடலில் அப்போது நிலவியது ஒரு சமருடன் கூடியஅமைதி.

நேரம் கடந்ததால் எதிரியின் பலம் கடலில் இப்போது கூடியிருந்தது. எதிரியின் டோறாக் கலங்களுடன் கடற்புலிப்படகுகள் கடுஞ்சமரிட்டன. கடற்புலிகளின் ஒரு தொகுதிப் படகுகளின் தாக்குதலில் ஒரு டோறா கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டது. இரும்பொறை கனரக ஆயுதம் பொருத்தியிருந்த தன் கட்டளைப் படகில் நின்றபடி சண்டையை வழிநடாத்திக் கொண்டிருந்தான்.

சற்றுப் பின்நகர்ந்த இரும்பொறையின் கட்டளைப்படகு ஆவேசத்துடன் எதிரியின் டோறாக் கலமொன்றை இனங்கண்டு தாக்குகிறது. இப்போது டோறாப்படகு கடலில் நின்று சுழன்று கொண்டிருந்தது. இரும்பொறை கரும்புலிப்படகொன்றை அந்த டோறாவைச் சிதைக்க விடைகொடுத்தனுப்பினான். அது கடலின் அலைகளூடே புகுந்து டோறாவுடன் மோதியபோதும் வெடிக்கவில்லை. நிலமையைப்புரிந்த இரும்பொறை ஆவேசத்துடன் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் நிற்கவேண்டிய தன் கனரக ஆயுதம் பொருந்திய கட்டளைப்படகை எதிரியின் டோறா நோக்கி வேகத்துடன் முன் நகர்த்தினான்.

எப்போதும் போல, கடலில் ஏதாவது பிசகு நடந்துவிட்டால் அடுத்த கணம் இரும்பொறையின் படகு அங்கே நிற்கும். இலக்கு விலகிவிட்டதோ, வெடிமருந்து வெடிக்கவில்லையோ, என்ன பிசகோ.... எங்கோ நிற்க வேண்டியவன் கரும்புலிப்படகு தாக்கிய எதிரிக்கலத்தின் அருகில் நின்றான். ஏன் இதற்குள் என அருகிலிருந்த படகில் நின்ற போராளிகள் அங்கலாய்த்தார்கள் இரும்பொறையை



கடற் சமர்ரொன்றை வழிநடத்தும் துணைத் தளபதி லெப்.கேணல் இரும்பொறை

புலிகளின் துணைத்தளபதி இரும்பொறையின் வழிநடத்தலில் மூன்று தொகுதிகளாகப் பிரிந்து கடற்களச் சமருக்கு கடற்புலிகளின் சண்டைப் படகுகளும் கரும்புலிப்படகுகளும் புறப்படுகின்றன. முல்லைத்தீவுக் கடற்பரப்பிலிருந்து தங்கள் இலக்கை எதிர்பார்த்து அதிவேகத்தில் அலைகளை ஊடறுத்து விரைந்தன படகுகள்.

இப்போது சிங்களக் கடற்படையின் கலங்களில் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி தங்கள் விநியோகப்பயணத்தை ஆரம்பித்தன. கடற்புலிகளின் படகுகள் இலக்கை இனங்கண்டு மூன்று முனைகளில் எதிரிகளின் கலங்களை முற்றுகையிட்டன. கடற்சண்டையைக் கடற்புலிப்படகுகள் தொடக்கிவைத்தன. எதிர்பாராத நேரத்தில் தங்கள் கலங்களில் பட்டு வெடித்துச் சிதறும் சன்னங்களைக் கண்டு சிங்களக் கடற்படை திகைத்தது. இரும்பொறையின் கட்டளைப் படகும் அதன் துணைப்படகுகளும் எதிரியின் பாரிய கப்பலொன்றை இனங்கண்டு தாக்குதல் தொடக்கத் தயாராகின. எதிரியின் கப்பலில் இருந்து 1200மீற்றர் தூரத்தில் நின்றபடி கரும்புலிப்படகை கப்பல் மீது மோதவிட தன் தளபதியிடம் அனுமதியைக் கோருகிறான் இரும்பொறை. எதிரி நிதானித்து தன் பலத்தை அதிகரிப்பதற்கு முன் எதிரி திகைத்திருக்கும் அந்த நேரத்தில் 1200 படையினருடன் இருந்த அந்த "பிறைட் ஒவ் சவுத்" கப்பலைச் சிதறடித்துத் தன் இதயச் சுமைகளை இறக்கி வைப்பதற்காக அவன் இதயம் துடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் தளபதியால் உடன் அனுமதி வழங்க முடியாதநிலை. பொது மக்கள் அந்தக் கப்பலில் இருப்பதாகத் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்திவிட அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள். எல்லோரும் நிதானித்து அவனைப் பின்நகர்த்துவதற்கிடையில் ஆவேசமாய்த் தொலைத்தொடர்புக் கருவியில் ஒலித்துக் கொண்டிருந்த அவன் குரல் ஓய்ந்திருந்தது. அந்த வீரன் தன் கட்டளைப்படகிற்குள் இரத்தவெள்ளத்தில் மௌனமாய் கிடந்தான். ஒருறவாய் தங்களுடன் உண்டுபடுத்து ஊட்டி வளர்த்த தளபதியைக் கடலில் பறிகொடுத்த சோகத்துடன் அவனையும் இன்னும் சில தோழர்களையும் வித்துடலாய்ச் சுமந்தபடி படகுகள் கரைதிரும்பின.

"எனக்கு ஒண்டு நடந்தா எங்கட கடற்புலிகளையே சிறப்பாக வழிநடத்தக் குடியவனெண்டு நான் கற்பனையெல்லாம் போட்டுவச்சிருந்தன் ஆனா அது அவன்ர சவோடை முடிஞ்சுபோச்சு '' என்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி ஏங்கியது எத்தனை உண்மையானது. புறப்படும் போதே தன் இலக்கை அழிக்காமல் மீள்வதில்லை என்று புறப்பட்டவன் பின்னர் வரவேயில்லை. எந்தச்சண்டையிலும் ஏதாவது பிசகெண்டால் தன் படகுடன் அங்கே நிற்கும் ஒரு சண்டைக்காரனை நாங்கள் இழந்து போனோம்.

1991 இல் நிதி என்ற பெயரின் வரலாறு முடிந்து போகாமல் இன்னும் பத்து வருடங்கள் இரும்பொறையாய்ச் சாதனைபடைத்த திருப்தி ஒருவேளை அவன் ஆத்மாவிற்கிருந்தாலும் ஒரு எதிர்கால கடற்படைத்தளபதியின் வாழ்வு இடையில் முடிந்துவிட்டதே என்ற எங்களின் நெஞ்சத்து வேதனை அவன் ஆன்மாவிற்கு எட்டுமா? ■

# அளவிட முடியாத ஆழங்கள்

-கழியோடி-

அடர்த்தியான இருளில், உயர்ந்து எழுந்து விழும் அலைகளிற்குள் அந்தப்படகிலிருந்து குதித்த போராளிகளால் மற்றைய படகுகளை அடைய முடியவில்லை. சிலர் குப்பி கடித்து வீரச்சாவு அடைகின்றார்கள். குப்பி கடித்தும், அது கடல் நீரிற்குள் செயலிழந்துபோக உடல் தளர்ந்த நிலையில் மற்றவர்கள் நீரோட்டத் திசையில் கரைபேறுகின்றனர்.

கடுமையான இராணுவப் பாதுகாப்பிற்கு இடையிலும் எப்படியோ அவர்களது கண்களில் மண் தூவிவிட்டுக் கரையேறிய அந்தப் போராளிகள் ஒரு மறைவிடத்தில் தங்கி ஓய்வெடுத்தபடியே அடுத்து என்ன செய்வது என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தேசத்தின்மீது மட்டுமே ஆசை கொண்ட அந்தப் போராளிகள், உயிரின்மீது கொண்ட ஆசை காரணமாக, பயத்தினால் அல்லது பணத்திற்காக ஏதோ ஒன்றுக்காக காட்டிக்கொடுக்கப்படுகின்றார்கள்.

சண்டைக் களங்களில் அவர்களை உயிரோடு பிடிக்க முடியாத இராணுவம் ஆவேசத்துடன் சுற்றி வளைக்கின்றது. கடைசிப்பாதுகாப்பாக கழுத்திலே அணியும் நஞ்சைக்கூட இழந்துவிட்ட நிலையில் நிராயுதபாணிகளாக நின்றபொழுதும் இராணுவத்திடம் சரணடைய மறுத்துவிடுகின்றனர்.

எதிரியின் எல்லைக்குள், அவனது முற்றுகைக்குள், அடுத்த கணம் தங்களது உயிர் பிரிந்துவிடப் போகின்றது என்று தெரிந்த பின்னரும் தங்களது அன்பான உறவுகளை, சகதோழர்களை, தேசத் தலைமையை, அன்றைய தேசத்தின் இறுக்கமான சூழலை, தேச மக்களின் எதிர்காலத்தை எல்லாவற்றையும் சில கணங்களுக்குள் நினைத்து வேதனைப்பட்டபோதும் எவ்வித தயக்கமுமின்றி அவர்கள் சரணடைய மறுத்தார்கள்.

அலட்சியமாகவும், விளையாட்டுத்தனத்துடனும் கருத்தைக் கவராத தோற்றங்களிலும் எங்கள் தேசத்து வீதிகளில் திரிந்த அந்தப் போராளிகள் அப்பொழுது காட்டிய மனவுறுதி அசாத்தியமானது என்றாலும் அது விடுதலைப்புலிகளுக்கே இயல்பானதும்.

இறுதியில், முற்றுகைக்குள் நின்ற அந்த ஆண், பெண் கடற்புலிப் போராளிகள் தங்கியிருந்த கட்டடம் எதிரியால் புல்டோசர் கொண்டு இடித்துத் தகர்க்கப்படுகிறது. உயிரோடு எங்களது போராளிகள் உழக்கப்படுகிறார்கள்.

தேசத்தின் சுமையை பகிர வந்தவர்கள் இறுதியாகக் கற்களின் இடிபாடுகளைத் தங்கள்மேல் தாங்கியபடி புல்டோசரின் சக்கர அழுத்தத்தின் கீழே நசியுண்டு போகின்றார்கள்.

இதே சம்பவத்தில் இவர்களுடன் அதே படகில் வந்து கடலில் குதித்த இன்னும் மூன்று போராளிகள் இவர்களைவிடக் கொஞ்சம் தூரம் விலகி காட்டை அண்மித்த பிரதேசமொன்றில் கரையேறுகின்றார்கள் அவர்களில் இருவர் ஆண்கள். ஒருவர் பெண் போராளி.

அந்தப் பிரதேசத்திலும் இராணுவப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இராணுவ நடமாட்டம் அதிகமாகவே இருந்தது. அதற்குள்ளேயும் இவர்கள் உணவு, நீர் எதுவுமற்ற நிலையில் எதிரியின் கண்களில் படாமல் தங்கியிருக்கின்றார்கள்.

அந்த இரண்டு ஆண் போராளிகளில் ஒருவர் போராட்டத்தில் இணைந்த சூழல் வித்தியாசமானது. இயந்திரமயப்பட்டுவிட்ட உலகில் அதிகம் குனிந்து நிமிரத் தேவையற்ற சூழலில் இருந்தும் தமிழீழத்தையே சுவாசித்துப் போராளியாகியவன் அவன்.

ஆகக் குறைந்தது நீர்கூட இல்லாத சூழ்நிலை. அவர்கள் எல்லோருமே தளர்ந்துதான் போயிருந்தார்கள். அதிலும் அவன் அதிகமாகச் சோர்ந்து போயிருந்தான். உடலின் எந்தவொரு பாகத்தையும் அசைக்க முடியாத தன்னியக்கமேயற்ற சூழலில் பல தடவைகள் குப்பிகடிக்க முயன்ற அவனை மற்ற இரண்டு போராளிகளும் தடுத்து வைத்திருந்தார்கள்.

ஒவ்வொரு போராளியினதும் தோள்களை அழுத்தும் தாயகச் சுமையை அறிந்தும் அனுபவித்தும் கொண்டிருந்த அந்தப்போராளிகளால் தங்களுடன் சேர்ந்து சுமை சுமந்த அந்தப் போராளியை வீணாக இழக்க முடியவில்லை. எஞ்சியவர்கள் ஊட்டிய மனவுறுதிதான் அவனது உயிரை அந்த இறுக்கமான முற்றுகைக்குள்ளும் பல மணித்தியாலங்கள் தாக்குப் பிடிக்க வைத்தது.

வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில், கண்முன்னே தங்களது தோழனைப் பறிகொடுக்க விரும்பாத மற்ற இரு போராளிகளும் அவனை மறைவாகப் படுக்கவைத்துவிட்டு அவனிடம் பாதுகாப்பிற்காகத் தமது குப்பியையும் கொடுத்துவிட்டு உணவும் மருந்தும் தேடி முற்றுகைக்குள் இருந்து சந்தடியின்றி வெளியேறுகின்றார்கள்.

முற்றுகைக்குள் இருந்து வெளியே போனவர்களால் எப்படியோ தங்களது முகாம் ஒன்றைத் தேடிப்பிடித்து தேவையானவற்றைப் பெற்றுக்கொண்ட பொழுதும், மீண்டும் உள்ளே செல்ல முடியவில்லை.

மூன்றாவது நாள் முற்றுகை சற்றுத் தளர்ந்தபொழுது அவர்கள் போய்ப்பார்த்தது, வேதனை உறைந்த முகத்துடன் நீரின்றியே நிரந்தரமாகத் தூங்கிப் போயிருந்த தங்களது தோழனைத்தான்.

சரியாக ஒரு மாதத்தின் பின்னரே கடலில் ஓரளவிற்காவது பயணிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியது.

ஒரு படகில் பல தோழர்களுடன் வந்துவிட்டு அவர்களில் பலரைக் கண்முன்னேயே இழந்த சோகத்துடன், அதுவரை காலமும் பாதுகாத்த போராளிகளிடம் விடைபெற்றுக்கொண்ட எஞ்சிய இரு கடற்புலிப் போராளிகளும் மீண்டும் தங்கள் குழுவினர்களுடன் இணையப் புறப்பட்ட பொழுது, அங்கிருந்தவர்களின் விழிகளில் துளிர்த்த நீரைப் பார்த்தபடியே கடல் மௌனமாக இருந்தது. அதுவும் அழுதிருக்கக்கூடும். ஆனால் அது யாருக்கும் தெரிய வாய்ப்பில்லையே.

ஆழக்கடலைக்கூட அளக்க நேரிடலாம். எனினும் நீலக்கடலின் வீரப்புலிகளின் ஈகங்களையும் சோகங்களையும் யாராலும் அளக்க முடியாது.



www.eelamview.com

www.eelamview.com



10ஆம் பக்கத் தொடர்ச்சி......



# களமாடும் மருத்துவம்

கொடுத்து ஒரு அங்கவீனத்தை வெற்றிகரமாகத் தடுக்கிறோம். எனினும் எண்ணம் மகிழ்வை மேல் நிலைக்கு கொண்டு வருகிறது. சுமார் நான்கு மணித்தியாலத்திற்கிடையில் சிகிச்சை நிறைவுக்கு வருகிறது. எனினும் இதன் பூரண வெற்றி அறியப்படுவதற்கு 24 மணித்தியாலங்கள் பொறுக்க வேண்டும். எனினும் நோயாளியை இங்கு வைத்திருப்பது களச்சுழலுக்கு உகந்ததல்ல. ஆதலால் மயக்கம் புரணமாக தெளிந்து சில மணிகளில் பின்னுக்கு அனுப்பலாம் என்னும் முடிவுக்கு வருகின்றனர்.

நேற்றைய வெற்றியின்மை இன்றைய செயல்களால் ஈடுசெய்யப்பட மனம் அமைதியடைகிறது. எனினும் உடற்களைப்பு அவனை விரட்ட நித்திரையிடம் சரணம் புக முனைகிறான்.

அப்பொழுது இன்னொரு வாகனத்திலிருந்து அவசர அவசரமாக காயமடைந்த போராளி ஒருவன் இறக்கப்படுகிறான். அவனுக்குரிய உயிர்காப்புச் சிகிச்சைகள் அளிக்கப் படுகிறது. மேற்படி சிகிச்சையை மற்றவர்களுடன் இணைந்து செய்த வண்ணம் நோயாளியின் கையில் கட்டப்பட்டிருந்த காகித அட்டையில் குறிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கிறான். அவனின் முகமாற்றம் திருப்தியினைக் காட்டுகிறது..... குறித்த போராளி காயமடைந்து இரண்டு மணித்தியாலங்கள்தான் சென்றிருந்தது. அவனின் வலது மேற்புயம் சிதறல்காயத்திற் குட்பட்டுள்ளது. அவனுக்கு செய்யப்பட்ட முதலுதவி சிகிச்சைகளும், குருதிக்கலன் திருத்தும் சிகிச்சை தேவைப்படும் என்பதும் அவ்வட்டையில் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்னர் உப மருத்துவ நிலைகளில் இருந்து வந்திருந்த மருத்துவப் போராளிகளுக்கான வகுப்பில் மேற்சொன்ன விடயங்களை மீள வலியுறுத்தியிருந்தான். சின்னச் சின்ன விடயங்களில் நாங்கள் கூடுதல் கவனமெடுப்பதுடன், நிதானமாகவும், வேகமாகவும் செயற்பட்டால், பலரின் உயிரைக்காப்பதுடன், அங்க இழப்புக்களையும் தவிர்க்கலாம் என்றவன் அதற்குரிய முக்கிய கருத்துக்களை குறிப்பாக காயத்தின் தன்மையை, சிகிச்சையை குறிக்கும் அட்டையை காயக்காரருடன் அனுப்பும்படி வலியுறுத்தியிருந்தான். அதன் உடனடிப் பயனை உணரக்கூடியதாக இருப்பது ஒருவகை உற்சாகத்தைக் கொடுக்கிறது.

குறித்த நோயாளி சத்திர சிகிச்சைக்கான மேசையில் ஏற்றப்படுகிறான். உரிய ஏற்பாடுகள் விரைவாக நடைபெறுகின்றன. அப்பொழுது எதேட்சையாக அவன் கூரையை அண்ணாந்து பார்க்கிறான். மேலே இடப்பட்டிருந்த தீராந்திகள் உழுத்திருந்தன. அவற்றிலிருந்து கொட்டும் மரத்தூசு திறக்கப்பட்ட சத்திர சிகிச்சைப் பகுதியினுள் விழலாம். அவ்வாறு நடைபெறுமாயின், அது சத்திர சிகிச்சைக்குப் பின்னான உடலின் காயம் மாற்றும் தொழிற்பாட்டைப் பாதிப்படையச் செய்யலாம். ஏன் சத்திர சிகிச்சையின் நோக்கத்தையே சிதறடித்து விடலாம். வேக வேகமாக இவர்கள் மருத்துவ நிலையை நகர்த்தி வந்ததனால் இதனை விட சிறந்ததொரு இடத்தை அவர்களால் அப்போதைக்கு தெரிந்தெடுக்க முடியவில்லை. அது இராணுவத்தின் ஒரு மினி முகாம். சாதாரண நிலைமைகளில் இவ்வாறான சிகிச்சைகள் மூடிய தொகுதியொன்றினுள்ளேயே நடைபெறும். அங்கு வெளிக்காற்று, தூசு என்பன உட்செல்வது தடுக்கப்பட்டு குளிரூட்டப்பட்டிருக்கும். தொற்று நீக்கப்பட்டிருக்கும். இன்னோரன்ன நவீன வசதிகளை உள்ளடக்கியிருக்கும். அங்கு பணியாற்றுபவர்களின் சீருடைகள் ஒவ்வொரு சத்திர சிகிச்சையின் பின்னும் மாற்றப்படும். தேவையான ஓய்வு எடுக்கப்படும். மேற்படி காரணங்களினால் சிகிச்சையின் வெற்றிவீதம் அதிகமாகவே இருக்கும். எனினும் இவ்வாறான யுத்த சூழ்நிலையில் இது சகஜமானதே. போர் நெருக்கடிகளை சந்திக்கும் எல்லா தேசமுமே இவ் வாறான நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பது ஒன்றும் புதினமில்லை.

மயக்க மருந்து கொடுக்கப்பட்டு சிதைவிற்குள்ளாகியிருந்த அவையவமானது சீராக வெட்டித்திறக்கப்படுகின்றது. சீறும் இரத்தக்குழாய்கள் உபகரணங்களால் கவ்வப்பட்டு குருதிப் பெருக்கு நிறுத்தப்படுகிறது. தசை நார்கள் பிரிந்து விலக்கப்பட்டு சேதமடைந்திருந்த பிரதான நாடியானது கண்டுபிடிக்கப் படுகின்றது. இவ்வளவும் செய்வதற்கே இரண்டு மணித்தியாலங்கள் எடுத்து விட்டிருந்தது. அளவான உயரமில்லா மேசையில் நோயாளி கிடத்தப்பட்டிருப்பதால், தொடர்ந்து குனிந்து நின்று நுணுக்கமாக சிகிச்சை செய்வதால் நாரிப்பகுதி தசைநார்கள் விண்விண் என வலியெடுக்கத்தொடங்கிவிட்டது. இரைச்சல் கேட்கிறது. ◆ களைப்பால் வாடியவர்கள் ஒருவர் முகத்தை இன்னொருவர் அர்த்தமுடன் பார்க்கின்றனர். வரும் காயத்தை ஏற்பதற்காக மளமளவென சூழலைத்தயார்படுத்துகின்றனர். காயக்காரரை இறக்கும் போது அவர்கள் கதைப்பது கேட்கிறது. "கிபிர் சாத்திப்போட்டான். இரண்டு வீரச்சாவு. நாலு காயம்."

காயக்காரரை தரம் பிரித்துப்பார்க்கையில் அவனிற்கு அதிர்ச்சி கிடைக்கிறது. எப்போராளி தன் கடமையைச் சரிவரச் செய்ததால் ஒருவரின் அங்கம் காப்பாற்றப்பட்டதோ, அந்த மருத்துவப் போராளி பாரிய காயத்துடன் வந்துள்ளான். அவனிற்கான சிகிச்சையினைச் செய்து கொண்டிருக்கையில் பலவீனமான குரலில் கேட்கிறான் "டொக்டர் என்ர கால் தப்பும் தானே?" காயத்தைப் பொறுத்த வரை அவனது வலதுகால் முழங்காலிற்குமேல் வெட்டி அகற்றப்படவேண்டிய நிலையில் உள்ளது. ஆயினும் அதனை வெளிக்காட்டக்கூடாது. தனது புருவ அசைவின் மூலம் ஒரு வெள்ளைப் பொய்யைச் சொல்கிறான். பூரண மயக்க மருந்து உட்செலுத்தப்படுகிறது. அப்போது தான் உதடு திறந்து பொய் சொல்லவில்லை, என தன்னைத் தானே சமாதானம் செய்தவன் என்பறுக்கும் வாளினால் சர சரவென தொடையென்பை வெட்டுகிறான். ◆

தொடர்ச்சி......

# போரும் தீர்வும்

நடவடிக்கை இந்தியப்படைகளால் தொடங்கப்பட்டது. இன்றோ, இளைப்பாறிச்சென்ற குணரத்தினாவைப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் என்ற புதிய பதவியை உருவாக்கி அதில் ரணில் அரசு அமர்த்தியுள்ளது.

டார்பி. மெக் கின்ரி (DERBY, MC GINTY) ஆகிய இரு ஆய்வாளர்கள் பேச்சு வார்த்தை முன்னெடுப்பில் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

01. பேச்சுவார்த்தையில் தொடர்புடையோர் இதயசுத்தியுடன் பேச்சு மேசையை அணுகவேண்டும்.

02. பிணக்கின் மூலாதாரம் கண்டறியப்படவேண்டும்.

03.பேச்சின்போதோ அதற்கு முன்போ பலப்பிரயோகம் அல்லது அதனுடைய தோற்றப்பாடு இருக்கக் கூடாது.

04.பிணக்குடன் தொடர்புடைய அம்சங்கள் யாவும் இனம் காணப்பட்டு பேசப்படவேண்டும்.

05. பேச்சுவார்த்தைக்கு முதலிடம் கொடுத்து அதனுடைய வெற்றியை சம்பத்தப்பட்டோர் உறுதி செய்யவேண்டும்.

அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் இப்போதுள்ள உலக ஒழுங்கை நிரந்தரமாக்க விரும்புகின்றன. ஆனாலோ ஆய்வாளர்களின் முடிவு வித்தியாசமாக இருக்கின்றது. நிரந்தரமான அரசியல் ஒழுங்கிற்காக உரிமைக்கோரிக்கைகளை நிராகரிக்க இயலாது அநீதிகளை நிறுவனமயமாக்க முடியாது. நாடுகளின் உடைவைத் தடுக்க விளைவோர் ஏற்புடைய நிவாரணத்தை வழங்க முன்வர வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

சிறிலங்கா விவகாரத்தில் ஏற்பாட்டாளராக வந்திருக்கும் நோர்வே நாடு நடுநிலை வகிக்கும் என்ற நம்பிக்கை பரவலாக உண்டு. சிறிலங்கா வரலாற்றில் மூன்றாம் தரப்பின் ஈடுபாடு முதன் முறையாக நடைபெறுகின்றது. இது நல்ல முன்னேற்றமாக கணிப்பிடப் படுகின்றது. அமைதித் தூதுவர்கள் கடும் கண்ணீர் சிந்துவர் என்ற பைபிள் வாக்கு நினைவுக்கு வருகின்றது. (THE AMBASSADORS OF PEACE SHALL WEEP BITTERLY: I SHIAH, 33.7) இது நோர்வே ஏற்பாட்டாளர்களுக்கு ஆறுதலளிக்கும் மொழியாகும். அதே சமயத்தில் அவர்கள் ஏற்றுள்ள பணியின் கடினத்தையும் உணர்த்தப் போதுமானதாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சன்சூவின் "போர் கலை" என்ற நூலில் "பிணக்கு களைத் தீர்த்து வைப்பதில் திறனுடையோர் பிணக்குகள் தோன்ற முன்பே தீர்வு காண்கின்றனர்" என்ற வாசகம் காணப் படுகின்றது. இதன்படி தீர்வுகாண உழைப்போரின் திறமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. எந்த உருவத்தில், எப்போது முரண்பாடுகள் தோன்றலாம் என்பதை அவர்கள் முன்கூட்டியே அறிந்திருக்க வேண்டும். முரண்பாடுகள் தோன்றினால் அதற்குப் பரிகாரமாக எதைச் செய்யலாம் என்பதையும் தீர்மானிக்க வேண்டும். பாலஸ்தீன விவகாரத்தில் விட்ட தவறுகளுக்கு மீண்டும் இடமளிக்கக் கூடாது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறான செயல்களை சிறிலங்கா ஆயுதப் படையினர் செய்கின்றனர் செய்தபடியும் இருக்கின்றனர். பள்ளிக்கூடங்கள், தனியார்வீடுகள், பொதுச்சொத்துக்கள், வணக்கத்தலங்கள் என்பவற்றில் இருந்து முற்றாக வெளியேறத் தவறியுள்ளனர். வெளியேறும்போது கட்டிடங்களைச் சேதமாக்குவதோடு அதனுடைய பாகங்களையும் தளபாடங்களையும் ஏற்றிச் செல்கின்றனர். தமது புதிய தங்குமிடமாகத் தனியார் வீடுகளைச் சுவீகரிக்கின்றனர். அத்தோடு அப்பகுதி பொது வீதிகளையும் மக்கள் பாவிப்புக்குத் தடைசெய்கின்றனர். வயல் நிலங்களில் காப்பரண்களை அமைப்பதின் மூலம் விவசாய நிலங்களுக்கு ஊறு செய்கின்றனர். பனை போன்ற மரங்களைப் பெருமளவில் தறிப்பது மூலம் பாரிய பொருண்மிய அழிவை உண்டாக்கியுள்ளனர். கடற்படையினரின் கெடுபிடிகள் உச்சக்கட்டம் அடைந்துள்ளன. வடமராட்சி கிழக்கு மீனவர்களின் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்துள்ளது. இந்திய மீனவர்கள் இப்பகுதிக்கு இழுவைப் படகுகளுடன் வந்து தொழில் செய்கின்றனர். இதற்கு சிறிலங்கா கடற்படையினரின் மறைமுக ஆதரவு கிடைக்கின்றது

அரசும் தனது பங்கிற்கு புலிகளின் சம்மதம் பெறாமல் தமிழர் பிரதேசத்தில் நீண்ட தூரப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. திருகோணமலையில் நிலக்கரியில் இயங்கும் அனல் மின்நிலையம் அமைக்கத் திட்டமிடுகின்றது. வேறு இடங்களில் எழும்பிய எதிர்ப்புக்களால் திருகோணமலை தெரிவு செய்யப்படுகின்றது. இதனால் வரப்போகும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் பற்றி அரசு சிந்திப்பதாகத் தெரியவில்லை. புலிகளுக்கு உத்தியோக பூர்வமான அறிவிப்பைச் செய்யாதிருக்கும் அரசின் நடவடிக்கையைப் புரிந்துகொள்வது கடினமாகி வருகின்றது. புல்மோட்டையில் இருந்து தைத்தேனியம் என்ற பெறுமதிமிக்க உலோகத்தை சிறிலங்கா அரசு விற்பனை செய்வதை புலிகள் சில வருடமாகத் தடை செய்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் நிறுத்தப்பட்டிருந்த ஏற்றுமதி மீண்டும் தொடங்கியுள்ளது. நாளொன்றுக்கு 2000 தொன் வரையிலான தைத்தேனியம் செறிந்த புல்மோட்டை மண் இப்போது ஏற்றுமதியாகின்றது.

கோட்பாடுகளிலும் பார்க்க வரலாற்றைக் கவனியுங்கள் - OBSERVE HISTORY MORE THAN DOCTRINE - என்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். சிறிலங்கா விடுதலைபெற முன்பே தமிழ்களை ஏமாற்றுவதும், கொடுத்த வாக்குறுதிகளைத் தவறவிடுவதும் சிங்களத் தலைவர்களின் தந்திரமாக அமையத் தொடங்கிவிட்டது. இந்த நடைமுறை 1920களில் பொன். அருணாச்சலத்தை ஏமாற்றியதோடு ஆரம்பித்தது. 1948 இல் எம்மை நம்புங்கள் என்று கூறிய எஸ். சேனநாயக்கா மலையகத் தமிழர்களின் வாக்குரிமையை பறித்து எமது பலத்தைக் குறைத்தார். 1957 இன் பண்டா செல்வா ஒப்பந்த முறிப்பு ஏமாற்றுப் படலத்தின் சிகரமாக அமைந்தது. ஆனால் இன்றோ, நோர்வே நாட்டவரின் பங்களிப்பு மூலம் எமது நம்பிக்கை துளிர்விடுகின்றது.

ஐம்பது வருடத்தைத் தாண்டிவிட்ட இப்பிரச்சினை படிப்படியாக உலக விவகாரங்களில் ஒன்றாக மாறிவிட்டது. போர் - அமைதிச் சமன்பாடுகளில் -WAR PEACE EQUATION- இரு முக்கிய அத்தியாயங்களாக உள்நாட்டுப் போர் -INTERNAL CONFLICTS, போரின் தீர்வு - CONFLICT RESOLUTION- என்பன அமைகின்றன. ஒருநாட்டின் எல்லைக்குள் நடக்கும் போர் உள்நாட்டுப்போர் என்று வகைப் படுத்தப்படுகின்றது. ஆட்சிப்பகிர்வு, ஆள்புலமுரண்பாடு, இனமத வித்தியாசங்கள், வரலாற்று அடிப்படையிலான எதிர்ப்புணர்வுகள் என்பன உள்நாட்டுப்போரின் காரணங்களாக அமைகின்றன என்கிறார்கள்.

போரின் முடிவு இராணுவத் தீர்வாக அமையாத பட்சத்தில் பிரச்சனையின் அடிப்படையான விடயங்கள் இனங்காணப்பட்டு பதில் காணப்பட்டால் உள்நாட்டுப் போரின் முடிவு

(1) ஈடுபடுவோரின் இணக்கத்துடனும்

(2) போரைக் கைவிடும் தீர்மானத்துடனும்

எட்டப்படும். இதைப் பல ஆய்வு மன்றங்கள் தமது தீர்ப்பாக வழங்கியுள்ளன. ✦



www.eelamview.com

www.eelamview.com



# வாருங்கள் பேரக் குழந்தைகளே.

ஆசைக் கொருபல்லும் இல்லாத கிழவியிவள்
பாசத்தின் மிகுதியால் மேடைக்கு வந்துள்ளேன்
தேசத்தைக் காத்துநிற்கும் செல்வமே என் மைந்தனே
நேசம் நிறைந்த எந்தன் பிள்ளைகளே பேரக்குழந்தைகளே
மாசற்ற மனத்தினரே மன்னிக்க வேண்டுகிறேன்.

அந்நியரின் கொடுமைகளை
ஐம்பத்தெட்டாம் ஆண்டுமுதல்
அனுபவித்த பழுத்த கிழம் இது
எந்நாளில் இவ்வவலம்
எம்மைவிட்டு அகலுமென
ஏங்கி அழுதகாலம் அது.

அன்றைய நிகழ்வுகளை
அசைபோட்டால் ஆறுநாள்
அனுகாது தூக்கமெமை இன்றும்
என்றோநாம் செய்த நல்ல
தவப்பயனால் இடர்தீர்த்த
தலைவனைநாம் வாழ்த்திடுவோம் என்றும்.

வழிமறித்துத் தாக்கித்
துவக்குகளைப் பறித்த செய்தி
தேனாய் இனித்தது அன்று
இன்றோ
நடுக்கடலில் வைத்துக்
கலமுடைத்த தறிந்து
பாகாய் உருகியது நெஞ்சு.

இதன் பெயர்தான் வளர்ச்சி
இதனாற்தான் இன்று இத்தகைய உயர்ச்சி
தமிழர் மனங்களில் தாங்கொணா மகிழ்ச்சி
தாய்மண் பறிக்கவந்தோர் நெஞ்சிலே அதிர்ச்சி

கடற்புறா என்றபெயர் காதுகளில் மோதியது



காலவோட்டத்தில் கடற்புலி ஆகியது
தரையிலே தாக்குதல் தனக்கு ஆபத்தென்று
கடலிலே ஆதிக்கம் செலுத்தினான் பகைவன்
தலைவனின் செயல்வீரம் அறியாத மடையன்

வளர்பிறை போல வளர்ந்தது கடற்புலி
என
உளறிடமாட்டேன் ஒருபோதும் அடியேன்
காரணம்
வளர்பிறை மீண்டும் தேயும் வளரும்
கடற்புலி வளர்ச்சி தேய்ந்ததே இல்லை

கடற்புலி அணியில் வீரர்கள் மட்டும்தான்
கஷ்டம்தானே பெண்களுக் கென்று
கதைத்த பழசுகள் திகைத்து நிற்கக்
கடற்புலி மகளிர் அணி உருவானது.

கடற்புலிகளின் வளர்ச்சியைக் கண்டு
கலங்கினான் எதிரி நடுங்கினான் பகைவன்
கரும்புலி அணியும் உண்டென்ற செய்தி
காதிலே விழுந்ததும் மோதினான் தலையை.

சாகரவர்த்தனா எடித்தரா என்று
சரிந்த கலங்கள் எத்தனை எத்தனை

சாதனை படைத்துச் சரித்திரமாகிய - என்
பேரக் குழந்தைகளை எங்ஙனம் மறப்பேன்?

அம்மம்மா என்றென்னை அன்போடு அழைத்து
ஆசையோடு என் மடியிற் படுத்து
அளவளாவிய என் பேரக் குழந்தைகள்
ஆழியில் காவியம் படைத்ததை அறிந்து
அழுதேன் ஆனால் பெருமையும் கொண்டேன்.

படிப்பிலே மிகவும் திறமைசாலி யெனப்
பலமுறை என்னாற் பாராட்டப் பட்டவர்கள்
படகிலே சென்று எதிரியை அழித்து
அதிலும் தாங்கள் திறமைசாலிகள் என
நிரூபித்ததனை எங்ஙனம் மறப்பேன்?



என் - வாழ்வில் மறக்க முடியாத காலம்
என் - கடற்புலிப் பேரக் குழந்தைகளுடன்
களிப்புடன் பழகிய பொற்காலம்
அவர்களுள் ஒருத்தியாய் நானும் ஆகவேண்டுமெனக்
கனவு கண்டேன் பகற்கனவாயிற்று
மாவீரர்களுக்கு மண்போடமட்டும் - இந்த
மண்ணில் வாழ்கிறேன் - மண்ணுக்குப் பாரமாய்
பயனற்ற பிறவியாய்.

என்ன கிழவி ஏதேதோ சொல்கிறாய்
அந்நாளில் நீங்கள் போராடியிருந்தால்
இன்று ஏன் இந்நிலை என்று நீங்கள் கேட்பது
என் செவியில் விழுகிறது இதோ பதில் கூறுகிறேன்.

அன்று எம்மை வழிநடத்த ஆன தலைவனில்லை
இன்றுள்ள தலைவன் பிந்திப் பிறந்தது
எங்கள் குற்றமா? சொல்லுங்கள் பேரர்களே
எதிரி இன்று இறங்கி வருவதற்கு
எவர் காரணம்? உலகே அறியும் இதை
வீரப் புலிகளை வளர்த்தெடுத்து
வேண்டிய அணிகளை உருவாக்கி
நேரமறிந்து செயலாற்றி
நித்திரையின்றித் திட்டமிட்டுப்
போரை நடத்திடும் தலைவனே
வா என் அருகிலே - உன்னை
ஆரத் தழுவி நன்றி சொல்ல
ஆவல் கொண்டேன் வா மகனே.

ஆழியில் ஆயிரம் ஆயிரம் இரவுகள்
அலைந்து அலைந்து பகைவரை அழித்து
நாழிகைப் போதும் தலைவனை மறவா
என் - கடற்புலிப் பேரக் குழந்தைகளே
வாருங்கள் என் அருகே - உங்களை
வாஞ்சையோடு கட்டியணைத்து
வாயார நன்றி சொல்லி
வாழ்த்த ஆவல்கொண்டேன்
வாருங்கள் பேரக் குழந்தைகளே. ■

கடற்புலிகளின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் மூதாட்டி ஒருவரினால் பாடப்பட்ட கவிதை

# மௌன அங்கீகாரம்

சிறிலங்காவின் ஜனாதிபதி படையினர்க்கு விருது வழங்கி கௌரவிக்கும் வைபவமொன்றில் ஆற்றிய உரையில் சிலபகுதிகள் வருமாறு

'1985 இல் இந்த நாட்டில் ஆரம்பித்த இந்த யுத்தம் மிகவும் கொடியது. அந்த யுத்தம் இன்று சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் படையினரை எமது முப்படையில் இணைய வைத்துள்ளது.'

'இப்போது இந்த யுத்தத்தை நிறுத்த புதிய அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.'

'எமது படையினர் இந்தப் போரை வெற்றிகரமாக முடிக்கும் எண்ணத்தை கொண்டுள்ளவர்களாகவே இருப்பர் என நம்புகிறேன்'.

'இதுவரை காலமும் மிக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய முப்படையினர் இனியும் அதே அர்ப்பணிப்புடனும் விழிப்புடனும் இருக்கவேண்டிய தேவை உள்ளது. உங்களுக்கான அனைத்து ரக தேவைகள் வழங்கல்களை நாம் தருவோம் உங்களுக்கான சகல பராமரிப்பு தேவைகளையும் நாம் பொறுப்பேற்று செய்வோம்.... ஆனால் நீங்கள் விழிப்பாக இன்னமும் விழிப்பாக இருக்கவேண்டும்.'

'யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தேவையான ஆயுதங்களுடன் எப்போதும் தயார் நிலையில் நீங்கள் இருக்கவேண்டும்'.

இவ்வளவுதான்:

சரி சந்திரிகா கூறும் யதார்த்தம்தான் என்ன?

எதற்கு படையினர் தயார் நிலையில் இருக்கவேண்டுமென்கிறார்?

யுத்தத்தை மீண்டும் தொடர்ந்து வெற்றிகரமாக முடிக்கவா?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை சந்திரிகா கூறத்தேவையில்லை அதே கூட்டத்தில் சமூக மளித்திருந்த ரணில் சொல்லியிருக்கலாமல்லவா?

ரணில் அங்கு எதுவுமே பேசாது மௌனமாக இருந்துள்ளார்.

இதன் மூலம் சந்திரிகாவின் நோக்கத்திற்கு ரணில் மௌன சம்மதம் வழங்கியுள்ளார் என்று கருதலாமல்லவா?



www.eelamview.com

www.eelamview.com

# விடுதலை பெறாது விழமாட்டோம் கொடுதலை எனினும் அழமாட்டோம்.



-வியாசன்-

"வாழ்வு வசமாயிற்றென்று"
ஒருவன் பாடிப்போகிறான் தெருவில்.
"போடா போ பைத்தியக்காரா" என
குரல் வைக்கிறான் பதிலுக்கொருவன்.
இருதலைக் கொள்ளியாய் எம் தேசம்.
எதிர்த்திசை போகும் இருபடகுகளிலும்
ஒவ்வொரு கால்வைத்தேறிய ஒருவன்
கவடு கிழிய விழுந்தானாம் கடலில்.
வேகத்தில் சூல் கொண்ட புரிந்துணர்வுக்கு
சேடமிழுக்கிறது இப்போது.
நம்பிக்கைச் சமிக்ஞைகளின்
நரம்பறுந்துபோகில்
கொப்பளிக்கும் கோபக்குருதி.
இன்னும் நம்பிக்கையிழக்கவில்லை
ஆயினும் வாய்நுரைதள்ளி
வலுவிழந்த மாடுகளல்ல நாம்.
உச்ச எதிர்பார்ப்பைப் பிச்செறிந்து
இடிவிழுத்தலாகாது நெஞ்சில்.
தீச்சுவாலை பரவியபோது நீரபாய்ச்சி
அணைத்து நாம்
நிமிர்ந்தபோது
பேசுவோம் என்றீர்
ஆம் என்றோம்.
புரிந்துணர்வு என்றீர்
ஆம் என்றோம்.
போர் நிறுத்தம் என்றீர்
ஆம் என்றோம்.
கண்காணிப்பென்றீர்
ஆம் என்றோம்.
ஆயுதமற்றே அரசியற்பணியென்றீர்
ஆம் என்றோம்.
அடையாளம் காட்டியே உலவென்றீர்
ஆம் என்றோம்.
இடைக்கால நிர்வாகமென்றீர்
ஆம் என்றோம்.
A9 தெருவால் போய்வரவா? என்றீர்
அதற்கும் ஆமென்றோம்.
நாங்கள் ஆமென்றதே அதிகம்.
எங்கள் உயிர்மையத்தில் கூட உலவ
அனுமதித்தோம்.
ஆயினும் என்ன ஆச்சு?
வேர்கொள்ளவில்லையே எதுவும்.
வெய்யிலிற் கிடந்து விறகாகின்றன எல்லாமும்.
பொங்குவது எப்போது?
பெருகுவது எப்போது?
புசிப்பதுதான் எப்போது?
ஊமைக்கனவோடு எத்தனை நாட்கள்
உறங்குவது?
சந்திரிகாவுக்கு ரணில் மீது சந்தேகம்.
ரணிலுக்கோ சந்திரிகா மீது ஐயுறவு.
இவர்களைக் கண்டால் ஜே.வி.பி க்கு
உறுத்தல்.
அஸ்கிரிய பீடத்துக்கு மல்வத்த மீது எரிச்சல்.
மல்வத்த பீடத்துக்கு அஸ்கிரிய மீது ஆத்திரம்.
உலங்கு வானூர்திக்கு வாடகை கொடுத்தே
நோர்வே நாடு நொந்துபோகப்போகிறது.
பறந்து திரிந்தே பாதியுயிர் போய்விட்டது.
எல்லோருக்கும் உண்டசோறு செமிக்காத
ஏவறை.
எங்களுக்கோ வயிற்றுக்கில்லாத கொட்டாவி.
என்ன செய்வது?
மாமியாரின் சேலை விலகினால்
கையாலும் காட்ட முடியாது
வாயாலும் சொல்ல முடியாது
அதுபோல் அகப்பட்டுள்ளோம் நாம்.
பொய்யாய் இருப்பது பிழையென்றால்
உண்மையைச் சொன்னால் உதை விழுகிறதே.
சாமியாரின் பொறுமைக்கு ஒரு அளவுண்டு
சனங்களின் பொறுமைக்கும் அளவுண்டு.
வீட்டிலிருந்து வெந்த சோறுண்பதல்ல
விடுதலை
இது உயிர்களின் ஜீவராகம்.
மானுடப் பாடலின் மறுபெயர்.
தனக்கானதை தானே தெரிவு செய்வதே
சுதந்திரம் எனப்படும்.
மழையில் நனைவது போல்...
மண்ணில் நடப்பது போல்...
காற்றில் அளைவது போல்...

ஒரு சுகமான ஜீவிதம்.
நாமே நம்மை வனைந்தபடி
நாமே நமக்கானதை எடுத்தபடி
அசையும் ஒரு சுகம்.
வெறும் யாப்புகளின் வரைபடமல்ல விடுதலை.
வெளிநிரப்பிப்போகும் விடயமுமல்ல.
இது முகில்களைத் தொட்டுலவும் மிதப்பென
எவருக்கும் புரியவில்லையே ஏன்?
நாம் தமிழரென்பதால் போராடவில்லை
மனிதரென்பதாலுமே போராடுகின்றோம்.
அடக்க வந்தால்....
"வெள்ளை மாளிகை" அடிபணியுமா?
நெரிக்க வந்தால்....
"செங்கோட்டை" விழுந்து போகுமா?
பிடிக்க வந்தால்
"ஜெயவர்த்தனபுர" பேசாமலிருக்குமா?
பொங்கியெழுந்து போரிடுமல்லவா?
இதுபோலத்தான் நாமும்
எம்மை எவரும் இடிக்கக்கூடாது.
நிமிர்ந்த வாழ்வை நினைப்பது குற்றமல்லவே.
உலக மனச்சாட்சியின் கதவுகளே!
எமக்காகவும் கொஞ்சம் திறவுங்கள்.
மனிதாயுதம் தாங்கிய மகாபிரபுகளே!
எமக்காகவும் நாலுவார்த்தை பேசுங்கள்.
உலகாளும் எண்ணம் எமக்கில்லை.
எவருக்கும் நாங்கள் எதிரிகள் அல்லர்.
வன்னி நிலத்தின் வாசலில் நின்று
ஒன்றுரைப்போம்.
தினமும் வருகின்ற உதயத்தின் மீதும்,
திசைகள் அளந்துவரும் காற்றின்மீதும்,
பொன்னள்ளித்தூவும் நிலவின் மீதும்,
எம் பெருந்தலைவன் மீதும் ஆணையுரைப்போம்.
மண்ணில் நகரும் நதிகள் மீதும்,
மழை மீதும்,
கண்ணிற் தெரியும் காட்சிகள் மீதும்,
கல்லறைச் செல்வங்கள் மீதும் சபதமுரைப்போம்.
விடுதலை பெறாது விழமாட்டோம்
கொடுதலை எனினும் அழமாட்டோம்.
இன்னும் நம்பிக்கையிழக்கவில்லை நாம்.
நோர்வே தூதில் ஆர்வமிழக்கவில்லை
சிங்கள தேசத்து ஒளித்தாரகைகளை
இருளகற்ற வருகவென
கரம் நீட்டிக் காத்திருக்கிறோம்.



இனி அவர்களின் கையிற்தான் எல்லாமும்.
காலத்தை இழுத்தடித்துக் கரைத்தபின்
எம்மைக் கைவிடுவீர்களாயின்
வாழ்வதற்காகப் போரிடுவதைத் தவிர
வேறு வழியென்னவுண்டு எமக்கு?
நல்லனவின் பக்கம் நடப்போம்
நாங்களும் நீங்களுமாக



www.eelamview.com